உ

# சிவனருளமுதம்



சி. சக்திகிரீவன்

சிவஞான வெளியீடு, ஏழாலை.

உ

சிவமயம்



# சிவனருளமுதம்

சி. சக்திகிரீவன்

ஏழாலை

சிவஞான வெளியீடு

பங்குனி 1999

நூல் : சிவனருளமுதம்

ஆக்கம் : சி. சக்திகிரீவன்

முகவரி : ஏழாலை மேற்கு, ஏழாலை.

பதிப்பு : 1999 பங்குனி

பிரசுரிப்பு : சிவஞான வெளியீடு

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

அச்சுப்பதிவு : ஏழாலை மஹாத்மா அச்சகம்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
இலங்கை.

உ

சிவமயம்

# நல்லை திருஞான சம்பந்தர் ஆதின
# குருமஹா சந்நிதானம்
## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
### பரமாசாரிய சுவாமிகள்
### வழங்கிய
# ஆசியுரை

சைவத் தமிழ்ப் பேரன்பர் சிவத்திரு. சி. சத்திகிரீவன் யாத்த "சிவனருளமுதம்" எனும் அரிய நூலைப் பார்த்தேன். அந்நூல் சிவபிரானின் திருவருட் பொலிவையும், சிவதர்சனத்தையும் உணரவைக்கும் பெருநூலாக அமைந்திருந்தது கண்டு மகிழ்ந்தேன்.

எங்கும் சிவனைக் காணும் உயரிய தத்துவ விளக்கம் நிறைந்த அரிய சந்தப் பாடல்களைக் கொண்டுள்ள இந்நூல் அனுபூதிச் செல்வர்கள் மத்தியில் பெரு வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

சிவனது அற்புதங்களும், தனித்துவமும், நிறைந்து காணும் இந்நூல் சமயானுஷ்டானங்களில் உறுதியாக நில்லுங்கள் என்று சைவ உலகிற்கு நாகரீகமான அழைப்பை விடுத்திருப்பது பெருமைக்குரியதாகும். பிராணாயாமம், தியானம், பாவனை, நியாசம் போன்றவை இறை தர்சனத்திற்கு அவசிய சாதனங்கள் என்பதை 51 ஆவது பாடல் மிக அழகுபட எடுத்தியம்புகிறது.

ஆறங்க அருமறைகள் சொல்லுமுறை பேணி
நீறங்க மேனிமறை யோர்உயர் நியாசப்
பேறங்க மான உயர் பிராணன்நிலை நிறுத்த
கூறங்க மாயங்கு குதித்தனன் உவந்தே.

76 ஆவது பாடலில் சிவனே எமக்கிறைவன். சிவையே எமக் இறைவி என அறுதியிட்டுச் சிவனை முழுமுதலாகக் கூறி இருப்பது சிவத்துவத்தின் உயர்வையும், கவிஞர் கொண்டுள்ள

சிவபக்தி வைராக்கியத்தையும் புலப்படுத்துகிறது. எனினும் ஏனைய சமயங்களில் பகைமையுணர்வில்லா உயரிய தன்மை. 30 ஆவது பாடலில் காணப்படுவது இந்துமதப் பெருமைக்கு மெருகூட்டுகிறது.

எங்கவர் தெய்வம் எந்நிலை பேணினும்
புங்கவர் எவர்க்கும் புன்மைகள் செய்யார்
அங்கவர் நிற்கும் அவர்நிலை கண்டு
இங்கவர் வருவர் இவன்சிவன் என்றே.

எல்லாத் தெய்வங்களுக்கும் செய்கின்ற பூஜைகள் உப சாரங்கள் அனைத்தும் சிவனையே அடைகிறதென்பதும் அனைத்துத் தெய்வங்களின் மகிழ்ச்சியைக் காணவேண்டின் சிவன்புகழ் பாடுவதே வழி என்பதையும் இவரெழுதிய பாடல்கள் தெரிவுபடுத்தியுள்ளன. 37 ஆவது பாடலில் உமையம்மையை மகிழ்விக்க எண்ணிய அனைத்துப் பெண் தெய்வங்களும் கூடி நின்று அம்பிகையின் அளவிடற்கரிய அனைத்துப் புகழைப் பாடியும் அம்பிகையின் சிரிப்பைக் காணமுடியாது போக அவர்கள் இறுதியாக சிவன் புகழை யாழில் மீட்டபோதே தலையசைத்து அம்பிகை சிரித்தாள் என்கிறது இப்பாடல்.

மாபெரு தெய்வப்பெண்கள் மகிழ்வொடு கூடிநின்று
சீர்பெரு செல்வியவள் சிரிப்பினைக் காணயாழில்
ஆம்மொழி பலவுமீட்டும் ஆங்கவள்சிரித் தாளில்லை
தேமொழி சிரமசைத்தாள் சிவன்புகழ் ஒன்றனுக்கே.

இப்பாடல் சிவபிரான் புகழைப்பாட வேண்டும் என்பதை மறைமுகமாக வலியுறுத்தியுள்ளமை காணத்தக்கது. 78 ஆவது பாடல் அனைத்துத் தெய்வங்களின்திரட்சியே சிவன் என்பதை தெளிவாக்கியுள்ளது.

சிவபக்தியின் வெளிப்பாடாக அமைந்த இந்நூலைப் படிப்போரும், பாடக்கேட்போரும் அனைத்துப் பேறும் பெற்றுத் திகழ்வர் என்பது திண்ணம்.

இந்நூலை யாத்த சைவத்திரு. சிவ. சக்திகிரீவனின் பணியைப் பாராட்டி பிரார்த்தித்து அமைகிறேன்.

---

உ

சிவமயம்

# மாவை ஆதீனகர்த்தா

## மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாத சிவாசார்யர்

## வழங்கிய

# ஆசியுரை

அன்றன்று நம் கண் எதிரே நடமாடும் ஓர் இரவலன் படுந்துன்பமோ காலத்தால் கவர்ந்த பிழையின் வறுமையோ அல்லது இன்னும் பலர் தம் வாழ்வில் தம்மோடு தொற்றி நிற்கும் மூப்பு நோய் மரணம் போன்ற அவலங்களையோ எவனது நெஞ்சத்தையும் இலகுவில் தொடுவதில்லை. இவர்கள் - பால் கவனஞ் செலுத்தக்கூட மனம் ஈர்ப்பதில்லை. ஆனால் பக்தி மார்க்கத்தில் எழுதப்பட்ட சமயக் கிரியைகள், பத்ததிகள், புராணங்கள், வழிபாட்டிற்கென எழுந்த தெய்வ உருவங்கள் என்பனவற்றை நோக்கும்போது, வாழ்வில் தோன்றும் அவலங்கள் யாவும் சமுத்திர அலைகள் தோற்றுவிக்கும் நீர்க் குமிழ்கள் போன்று தோன்றி மறையக் கூடியன என்ற உண்மையை மனித மனம் மெல்ல மெல்ல ஈர்த்திடுகிறது. இவ்வவலத்திற்குரிய காரணங்கள், ஏற்பட நேரிடும் சம்பவங்கள், நடைமுறையில் செயல்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்தும் மனிதன் மனிதநேயத்தோடு வாழாததுதான் காரணம் என்பதை உலக அறிஞர்கள் பல் —துறை வாயிலாக அறிந்து தரவுகள் தந்துகொண்டேதானிருக்கிறார்கள். சமய குரவர்கள் கூட அவலங்களைக் கண்ணுற்றும் அவற்றின் பரிகாரங்களை முன் நிலைப்படுத்தி இப்படித்தான் வாழ்வு அமையவேண்டும் அப்போது தான் மனித சமூகம் தெய்வீகப் பண்புகளோடு தெய்வீகமாக வாழ்ந்து தெய்வங்களோடு இணைந்து அவலங் களைத் துடைத்தெறியலாமென இயம்பி நிற்கின்றன.

ஆறுமுகநாவலர் கூட மனித சமூகத்தை இறைபக்தி மூல மாகத்தான் வாழுங்கள் என வலியுறுத்தியதோடு எப்படி வாழவேண்டும் என்பதை வருகின்ற சமூகம் கண்டறியும் வண்ணம் ஏராளமான சமய நூல்களை அச்சிட்டு வெளியீடு செய்துள்ளதை அனைவரும் அறிவர். காலத்திற்குக்காலம் இவ்வாறான பக்திச் சமய நூல்கள் ஓர் விருக்ஷம் எவ்வாறு திரும்பத் திரும்பப் பழங்களைத் தந்து உயிர்களைக் காக்

கின்றதோ அதேபோன்று அடிக்கடி வெளிவரும் சமயபக்தி நூல்களால் மனித சமூகம் பெறும் அருட்செல்வங்கள் ஏராள மாகப் பெருகிநிற்கும்.

கொடுமைகள் படர்ந்து மனித சமூகத்தை இடர்படச் செய்யும் தீவினைகளை நன்கறிந்த அறிஞர்கள், ஞானிகள், அடியார்கள் யாவரும் தம்வாழ்வைத் தியாகஞ் செய்து தமக்கென வாழாது பிறர்க்கென வாழமுயலும் போது அவர்களால் தான் இவ்வுலகம் கொடுமைகளால் அழிந்து போகாது ஏதோவோர் வகையில் தொடர்ந்து நிலை நிற்கின்றதென நிரூபிக்கப்பட்டிருக் கிறது. இவ்வாறானவர்களை உயர்ந்தோரெனப் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

"உண்டால் அம்ம இவ்வுலகம்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

என உயர்ந்தோரால் தான் உலகம் நிலைத்து நிற்கும் என்ற உண்மையை இளம்பெரு வழுதியார் எப்போதோ கூறிவிட்டார்.

மனித சமூகம் வளம் பெறுவதெப்படி என உணரும் போது மனிதர்கள் அன்பால் அருளால் பண்பால் உள்ளும் புறமும் ஒத்திருத்தலே என அறிஞர்களும் சமய குரவர்களும் கண்ட முடிவு இவற்றைக் கைக்கொள்ள உதவுவதே. காலத்திற்குக் காலம் அருளாளர்களால் வெளியீடு செய்யும் அருட்பாக்களும் சிந்தனா சக்திக்குரிய தரவுகளுமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி கொடுமைகளும் சங்கடங்களும் மாயா சக்தியால் எழுந்த லோகாயுதப் பற்றும் மனித சமூகத்தைப் பீடித்து வாட்டி வதைப்பதோடு நில்லாது தொடர்ந்து செல்லவும் துணிந்து நிற்கிறது. அதர்மத்தின் துணைக்கு மனிதச் செயல்களும் துணை போகின்றது. காரணம் மனித மனத்தில் பசுமையான சிந்தனைகள் ஏற்றப்படாததும், தேவையற்ற தரவுகளை அந்தச் சிந்தனா சக்திகளுக்கு உறிஞ்சக் கொடுத்து அதன் மூலம் சுயநலங்கள் வளர்ச்சிபெற்று அடுத் தவனையும் அவ்வழியில் ஈர்த்துவிடுவதனாலும் மனிதன் ஆனந்தங் கொள்கின்றான். தீய சக்தியாளர்கள் நல்ல மனி தனையும் தனது தேவைக்கான கருவியும் ஆக்கிவிடுகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளைத் தடுக்கவே நாயன்மார்கள் தம்

வாழ்நாள் முழுவதும் இடம்விட்டு இடம்சேர்ந்து ஏராளமான திருவருட்பாக்கள் மூலம் மனித சிந்தனைகளையும், செயற்பாடு களையும் இறைபக்தியில் ஈர்த்து அவர்களை இறைவன்பால் சேர்த்தும் விட்டனர்.

எழுந்ததே அரும் பெரும் திருக்கோயில்கள், திருக்கோயில்கள் மூலம் பிறந்ததே அறநெறிகள். அரசர்கள் கூட இறைவன் பால் இணைந்து அறநெறிச் செயல்களுக்காக அர்ப்பணித்த கொடைகள் இன்றும் நிலவுவதால்தான் உலகமும் இந் நூற்றாண் டில் தடுமாற்றங்களோடு உருள்கின்றது. எனவே காலத்திற்குக் காலம் இறைவன்பால் அணைத்து விடக்கூடிய திருவருட்பாக்கள் மாறி மாறி வரும் சமுதாயப் பிறப்பிற்கு அவசியந் தேவை என்பது உணரப்படுகிறது. அந்த உணர்வின் பலனே இன்று வெளி யாகும் ''சிவனருளமுதம்''. இவை திருவருட்சக்தியின் பேறால் பிறந்த பாக்களாகும்.

இந்தப் பாக்கள் இறைவன்பால் மனதை ஈர்த்துவிட அமோகமான உந்து சக்தியை தன்னகத்தே கொண்டிருக்கிறது. உலகில் நல்லன நடக்கவேண்டும் தீயன அகலவேண்டும் என்று அருளாளர்கள் நடாத்திய பக்தி எழுச்சி இயக்கங்கள் போன்று ஞானவழி நின்று தொண்டுபல புரிவதே இன்றைய தேவை ஆகும். இதற்காக நாமனைவரும் ஒருகணமாவது இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். இந்த வகையில் திரு. சக்திகிரீவன் இன்றைய் காலகட்டத்தில் இறைவன்பால் மனித மனதுகளை ஈர்த்து விடவேண்டும் என்ற அவாவினால் இவர் திருவருட்டுணை கொண்டு ஆக்கிய பாமணிகளை இன்றைய உலகு வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. ஆலயங்களிலே இடம்பெறும் வழிபாட்டு அம்சங்களைக் கூர்ந்து கவனித்த மக்களே அவற்றைத் தொடர்ந்து எங்கும் ஸ்தாபியுங்கள் என,

பாடவேண்டில் அவன்புகழே பாடவேண்டும்
ஆடவேண்டில் அவனடனம் ஆடவேண்டும்
தேடவேண்டில் அவனடியே தேடவேண்டும்
நாடவேண்டும் நமச்சிவாய நாவினாலே.

என்ற 44 ஆம் பாவைப் பஞ்சாட்சரத்துடன் சேர்த்துப் பாடி பஞ்சேந்திரியங்களுக்கும், தொண்டுகள் கொடுத்து மனித மனங்களை தூய்மை ஆக்க நூலாசிரியர் தந்த தரவுகள் உண்மையில் காசிபரிஷியின் உபதேசங்களுக்குச் சமனாகின்றது.

வாழ்வை அவமாக்கும் நண்பர்களைக் கூட இப்பாக்களினால் அவர்களை நன்மார்க்கத்திற்கு இழுத்துவிடும் முயற்சியில் பரம்பொருள் ஒன்றே என வலியுறுத்தியும், கையிலை வாழ் சங்கரன் மார்க்கண்டேயர்க்கு அருளியதையும் மிக இனிமையாக 78, 79 ஆம் செய்யுள்களில் பிரபலப்படுத்தியுள்ளார் இவ் ஆசிரியர். இதனை,

சிவனேநின் அருட்டிறத்தை சிறிதேனும் அறியாமல்
அவமே விளம்புகிறார் அறிவே மயங்குகிறார்
புவனாதி யண்டமொடு கணபதிநீ கந்தனும் நீ
சிவசக்தி நீஅரிநீ திரண்டபரம் பொருளும் நீயே.

பனிசேர் சடைமுடியான் தரியாத மறலிதன்னை
நனிதே உதைத்தழித்து மார்க்கண்டர் கெண்ணில்வய(து)
இனிதே உவந்தழித்துத் தொண்டர்க்கிறப் பிலலையென்ற
கனியாம் பொருள் விளங்கம் காட்டினான் கருணையினாலே.

எனப்பாடியுள்ளார்.

சமய குரவர்களது சிந்தனைகள் யாவும் இச் சிவனருளமுதத்திலும் தென்படுகிறது. ஆறுமுகநாவலரின் அறிவுரைகளும் இவற்றில் தேங்கி நிற்கின்றன. அருணகிரிநாத சுவாமிகள் வேண்டிய வரங்கள் போன்ற வகையில் 77 ஆம் பாவில்,

“அவமே பழிசொல்லி அறுசமயம்
உனக்கில்லை என்னும் வீணர்
தவமே புரிந்து தகவுஜெபம்
புரியஅருள் தருவை யானால்
சிவமே அனைத்துமெனத் தெளிந்து
மனம்மாறாமல் சிறுமை போக்கி
பவமே தொடராமல் பழிபயிலா
வாழ்வளிக்கும் பரமசோதி.

என்ற வரிகள் அழகாகவும் அமைந்திருக்கிறது. வர்ணாச்சிரம தர்மங்களுக்குள் வாழவேண்டிய அறநெறிகளையும், அவை அவசியம் பேணப்பட வேண்டும் என்பதையும் இவ்வாசிரியர் அநேக பாக்கள் மூலம் அறியத்தந்துள்ளார். இவற்றிற்கெல்லாம் இலக்கிய இலக்கணப் புலமை முத்தமிழ்ப் புலமை என்றெல்லாம் அமைந்ததோடு திருவருட்டுணை மேலிட்டுக் காணப்படுவது இங்கு கவனிற்கற்பாலது. அத்திருவருட்டுணை பெற சூழல் காலம் பருவம் என்றெல்லாம் வேண்டும். ஏழாலைக் கிராமம்

ஆதியிலிருந்தே அருட்செயல்களை அளவுக்கதிகமாக ஆற்றும் மக்களைக் கொண்டது. அறிஞர்களையும், இறைவன்பால் ஆற்றுப்படுத்தும் வல்லமை கொண்ட சிந்தனையாளர்களையும், கொண்ட சிற்றூர். பருவகாலங்களுக்கேற்ப மக்கள் தத்தம் நடைமுறைகளை அதற்கேற்றவாறு நடைமுறைப்படுத்தும் பாங்குடையவர்களாவர். விவசாயம் மூலம் வளம் பெருக்குபவர்கள் ஆலயங்கள் அநேகம் நிறுவி அமுதுபடைத்தும் விழாக்கள் செய்தும் அகமகிழ்பவர்கள். எனவே நூலாசிரியர்க்கு இச் ''சிவனருளமுதத்தை'' உருவாக்க நல்ல சூழ்நிலையும் அமைந்திருக்கிறது. அதோடு நடராஜப் பெருமானைத் தீண்டி அபிஷேகித்து ஆராதனை செய்யும் வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது. தில்லைவாழ் அந்தணர்கள் தான் நடராஜப் பெருமானைத் தீண்டத் தகுதியுடையவர் என்பதாலே ஆதியில் தில்லை மூவாயிரவரில் ஒருவர்தான் நடராஜமூர்த்திக்கு ஆராதனை செய்யத் தகுந்தவர் என்ற கொள்கையை இன்நூலாசிரியர் அகற்றிவிட்டு, பக்தியின் விளைச்சலின் விளைவினால் அறுவடை ஆகும். அன்பு, காருண்யம், இதனகம் எல்லாம் சிவமயம் என்ற கோட்பாடுகளின் சார்பில் நடராஜப் பெருமானைத் தீண்டும் துணிவும் பெற்று நடமாடும் சிவதொண்டனாகிவிட்டார். இதுவும் பக்தியின் பேறே.

சிவனருளமுதம் தேவைக்கேற்ப தகுதியானதோர் தருணத்தில் அச்சாகி வெளியீடு செய்வதும் ஓர் சிவதர்மமாயிற்று. இச் சிவதொண்டன் என்றும் இன்புற்று தர்மத்தின் செயற்பாடுகளுக்கு சகாயமாகவிருந்து சிறந்த நன்மார்க்கத்தோடு நீடூழி வாழ்கவென ஆசிர்வதிக்கின்றேன்.

சிவமயம்

# சித்தாந்த ஞானபானு, சிவாகமஞானி
## சிவஸ்ரீ – சோ. ஈசான சுப்பிரமணிய சிவாசார்யார்
## வழங்கிய
# ஆசிச் செய்தி

ஏழாலை என்னும் கிராமத்திற் பண்டுதொட்டுச் சைவ சமய உணர்ச்சியிலே சிறந்தவர்களான பெரியோர்களும், சமயா சார ஒழுக்கமுடைய சிலர்களும், தமிழ்ப்பாஷை வல்லுனர் களான பல புலவர்களும், சித்தாந்த சாஸ்திர அறிவுடைய சிவஞானிகளும் வழிவழியாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கிராமத்தில் பிறந்தவரே எமது பேரன்பர் திரு. சிவப்பிரகாசம்—சக்திகிரீவன். அவர் இளமை முதல் தெய்வீக வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கடவுளைத் தாயாராக வழிபடுவதில் இவருக்கு ஆர்வம் மிகுதி. நித்தியத்தி லும், நவராத்திரி காலத்திலும் அன்னையைப் பக்தி சிரத்தை யோடு வழிபடுகிற வழமையுடையவர்.

அம்பிகை மூவகை வடிவில் பக்திமான்களுக்கு அனுக்கிரகம் செய்யும் பெருமையுடையவரென தேவி மகாத்மியம் கூறும்.

இலட்சுமீ பிரதான சமயே நவவித் ருமமாமாம்
வித்தியாப் பிரதான சமயே சரதிந்து சுப்ராம்
வித்வேஷி வர்க்க விஜயே [அ] பிதமால நீலாம்
தேவீம் திரிலோக ஜெனனி சரணம் பிரபத்யே.

உலகத்தவருக்கு ஐஸ்வரியத்தைக் கொடுக்கும் காலத்தில் மின்னல் போன்ற பொன்னிறமுள்ள இலட்சுமியாகவும், கல்வியைத் தருகின்ற காலத்தில் சரத் காலத்தில் சந்திரனைப் போன்ற வெண்ணிறமான சரஸ்வதியாகவும், எதிரிகளை வெற்றி கொள்கின்ற சமயத்தில் [தேவி] காளி துர்க்கை என்ற நாமங் களைத் தாங்கி நீலநிறத் திருமேனியுடையவளாகவும் இருந்து அருள்புரிகின்ற மூவுலகுக்குத் தாயான தேவியைச் சரணமடை கிறேன் என்கிறது.

அம்பாளை வழிபடுவோர்க்கு இனிமையான வாக்குவன்மை உண்டாகுமென்று கூறுகிறார். திருமந்திரத்தில் திருமூலர்

அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழிச் சீருடைச் சேயினை
தஞ்சமென் றெண்ணித் தன்சேவடி போற்றுவார்க்கு
இன்சொல் அளிக்கும் இறைவி என்றாரே.

இத்தகை பேறுகளைத் தரவல்ல தேவியை வழிபட்டதால் கவிபாடும் திறமை இவற்கு வரப்பிரசாதமாகக் கிடைத்துள்ளது. ஆறாதார நிலையில் விசுத்தி சக்கர மருட்சியில் தோன்றும் பாடல்கள் அருங்கருத்துக்கள் அமைந்தவையாகவும், பக்திச் சுவை நனி சொட்டுபவையாகவும் அமையுமெனப் பெரியோர்கள் கூறுவர். இத்தகைய நிலையில் அன்னையினது அருட்பிரசாதம் பெற்ற நூலாசிரியரின் கவிகள் சைவசித்தாந்தக் கருத்துக்கள், தேவாரத் திருமுறையின் அரும்பொருள்கள், சௌந்தர்யலகரியில் உள்ள அருங்கருத்துக்கள், நடராஜ தத்துவத்தின் சிறப்புக்கள் அமைந்தவையாக காணப்படுவதை படிப்போர் நன்கு தெரிந்து கொள்வர்.

23 ஆவது பாடலான

எல்லையிலாத் தனிக்கூத்தன் இணைந்தாடும் எம்பெருமான்
தொல்லைதரு எமதுவினை துடைத்துவரு பவமொன்றும்
இல்லையினி இல்லையினி என்றியம்பும் கைகாட்டும்
தில்லையுடைத் திருநடனம் சிந்திப்பார் இனிப்பிறவார்.

எனும் பாடல் சிவபெருமானின் திருநடனம் எம்மைத் தொடரும் பிறவித் தொடரை ஓயவைக்கும் வகையில் தனது தூக்கிய திருவடியை காட்டிய படி நின்று விளக்குகின்றது என்கிறது. இப்பாடலில் பவமொன்றும் இல்லையினி, இல்லையினி என்று திரும்பத் திரும்பச் சத்தியம் செய்து கூறுவது போன்று அமைந்திருப்பது இப்பாடலை மேலும் மெரு கூட்டுகிறது. இதே கருத்தைப் பின்வரும் சுலோகம் விளக்கி நிற்பது இங்கு சிந்திக் கற்பாலது.

லோகா நாய ஷீர்வான் டமருக நிருதைர்
லோகா சம்சார மக்னான்
தத்துவ பீதிம் தயாளு; பிரணாத பயகரம்
குஞ்சிதம் வாம பாதம்
உத்திருத்தேதம் விமுத்தை அஜனமிதி கராத்
தர்சயன் பிரத்தியயாத்தம்
த்ருதுவாவண்ஹிம் சபாயாம் கலயதி நடனம்
யஸ்சி வோன ஷபாயத் – என்கிறது.

உலக வாழ்வில் மூழ்கியிருப்பவளை டமருக ஓசையினால் அழைத்து பயப்படாதீர்கள் என்று அபயம் கொடுக்கிறவர், வழிபடுவோர் அச்சத்தைத் தீர்ப்பவர், தூக்கிய திருவடியைத் தூக்கி இடது கையால் காட்டி பிறந்து பிறந்து இறந்து உழலும் உயிர்களுக்கு முடிவிடம் இதுவே எனத் தன் கையால் காட்டி நெருப்பைக் கையிலே ஏந்தியபடி சத்தியஞ் செய்து கூறுகிறேன் என்கிறான் தில்லை நடராசன்.

முழுமுதலான சிவபிரான் யார் யார் எத்தெய்வத்தை தத்தம் பக்குவ நிலைக்கேற்ப வழிபட்டாலும் அவரேவர்க்கும் தீமைகள் விளையாது அருளும் சிறப்புக்குரியவர் என்பதை 36 ஆவது பாடலில் காணக்கூடியதாகவுள்ளது.

எங்கவர் தெய்வம் எந்நிலை பேணினும்
புங்கவ ரெவர்க்கும் புன்மைகள் செய்யார்
அங்கவர் நிற்கும் அவர் நிலை கண்டு
இங்கவர் வருவர் இவன்சிவன் என்றே.

இதனைச் சிவஞான சித்தியாரில் பாவத்தை ஒழித்துப் புண்ணியத்தைச் செய்யும் ஒருவன் தான் விரும்பிய ஒரு தெய்வத்தை வழிபட்டு வாழும் செயலை உடையவனாயின் சிவபிரான் அத்தெய்வத்தினிடமாக நின்று அச்செயலை ஏற்றுப் பயனளிப்பன் என்கிறது.

மனமது நினைய வாக்கு வழுத்தமந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி
சினமுதலகற்றி வாழும் செயலறமானால் யார்க்கும்
முனமொரு தெய்வமெங்கும் செயற்குமுன்னிலை யாமன்றே.

என்றும் நின்று நன்றுணரக் கூடியவொன்று அன்றியும் ஏனைத் தேவர்களும் வினைவயப்பட்டு பிறந்திறக்கும் உயிரியல்பு உடையோர். அவர் உயிர்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுப் பயனளிக்க வல்லவராவர் சிவபெருமான் ஒருவரே. வினைவயத்த ராதலின்றி அவ்வத் தேவர்களிடமாக நின்று உயிர்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுப் பயனளிக்க வல்லவராவர் என்பதை,

யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையும் செய்யும்
ஆதலால் னிவையி லாதா னறிந்தருள் செய்வனன்றே.

என்கிறது சிவஞானசித்தியார்.

நூலாசிரியர் இறைவனைப் பூர்வ புண்ணியப்பலனால் இறைவனின் திருவருள் விலாசத்தை எவ்வெவ் வகைகளில் எடுத்தாள முடியுமோ அவ்வவ் வகைகளில் எடுத்தாளப்பட்டு இருப்பது பாடல்களைப் படிப்போர்க்கு விளங்கும், மேலும் மக்களின் உய்விற்காக இறைவனுக்கு ஆகம விதியில் வழங்கப் படும் மூவகை உபசாரங்கள் பற்றி 41 வது பாடல் கூறுகிறது.

பாத யோக் பாத்யம்
காரோஷ் ஆசமநியம்
சிரசி அர்க்கியம்.

அகத்திருக் கண்ணிற் தோன்றும் அருள்சொரி
முகத்தினைப் பார்த்தவன் கரத்ததா சமனம்
பகற்றிருப் பாதத்திற் பாத்தியம் பனிச்சடை
யகத்திடை அர்க்கியம் காணுவை அருளவே.

என்கிறது இத்திருப்பாடல்.

61 ஆவது பாடல் திருமறைக்காட்டுப் பதிகத்தில் "யாழைப் பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்" என்ற தேவாரக் கருத்தும், சௌந்தர்யலகரியில் "விபஞ்சியா காயத்ரீம்" என்ற சுலோகத்தின் கருத்தும் அமைந்திருப்பதைக் காணலாம்.

சிவபிரான் அம்பாளோடு பாழை தூங்குகின்ற கமுகு நிறைந்த சோலையுள்ள தில்லையிலே தாழையேந்தியபடி தனித் துள்ளான் என்பதை,

யாழை வென்ற மொழியாள் பாகமுள்ள பெரியான்
பாழை தூங்கு கமுகு ஆடுசோலை தில்லை
யாழை யேந்தி நிற்கும் யமனின்கால னாவான்
தாழை யேந்தி நிற்பான் தரணிபோற்றும் தலைவன்.

எனும் பாடலில் அமைந்திருப்பது மேலும் இப்பாடல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமறைகாட்டுப் பதிகத்தில் உள்ள,

### சுந்தரர் திருமறைக்காட்டுப் பதிகம்

யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பறை வைத்தானிடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே.

என்ற பாடல் போன்றமைத்துள்ளமை காணத்தக்கது.

அறுவகைச் சமயத்தோருக்கும் அவ்வவர் கொண்ட முதற் பொருளாயும். சித்தாந்த சைவர்க்கு சச்சிதானந்த சொரூபியாகவும், பரஞானத்தால் அறிந்தனுபவிக்கப்படுவதாயும், உயிருக்கு உயிராகவும், உயிர்களுக்கு வியாபக அறிவைப் பயப்பிப்பதாயும் எங்கும் வியாபகமாய் இருக்கும் பரமசிவனது திருவடியை சிரத்தின் மேற் சூடிக்கொள்வோம் எனச் சிவஞானசித்தியார் கூறும்.

அறுவகை சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறாங்
குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்தங்
கறிவினி வருளான் மன்னி யம்மை யோடப்பனாகிச்
செறி வொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

என்பது நூலாசிரியரின் 25 ஆவது பாடலில்,

அறுசமய நெறியுமவன் அரும்புகழை எடுத்தியம்ப
மறுசமய மருவிடா மாண்புபெறு சித்தாந்தம்
பெறுசமய நிலைபெற்று பெருமைபுகழ் பொலிந்திடவே
திருநெறியே சைவநெறி திகழ்ந்திடவே செய்வோனே.

என்று கூறுவது அறுவகைச் சமயங்களும் சிவன் புகழை எடுத்தியம்பவே என்றும், அது சிவன் புகழைப் பயப்பிப்பதாயும் அமைந்துள்ளது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

இவ்விதம் இதிற் காணும் பாடல்கள் அனைத்தும் தேவார, திருமந்திர, பெரியபுராண நடையுடையவையாகவும், சைவசித்தாந்தக் கருத்துக்கள் பொதிந்தவையாகவும் அவற்றின் மறு ஒலிப்பதிவாகவும் அமைந்திருப்பதை உற்றுநோக்கிப் படிப்போர் விளங்கிக்கொள்வர்.

இவ்வருமை மிகு பாடல்களை உளங்கொண்டு பரிசீலித்த போது கடந்தகால மகான்களின் அருளொளி என்னுள்ளத்தில் சிலிர்ப்பைத் தந்தது. முதிர்ந்த நிலையில் இயலாமை காரணமாக மேலும் தொடர்ந்து எழுதவேண்டும் என்ற பேரவா இருந்தும் நிறைவு செய்யவேண்டியுள்ளது.

இன்னருள் பொலியும் அருட்பாக்கள் திருவருட் செல்வம் பெற்ற பக்திமான்களுக்கே அமைவதாகும். இவ்வரும் பெரும் நூலை ஆக்கி வெளியிடும் நூலாசிரியர் மேன்மேலும் திருவருட்

செல்வப் பொலிவு பெற்றுத் திகழப் பல்லாண்டு வாழ்ந்திருந்து சிவப்பணி பலபுரிய ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமான் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

உ

சிவமயம்

இந்து சமயப் பேரவைத் தலைவர்

ஆத்மீகப் பெருவள்ளல்

# அருட்கவி சீ, விநாசித்தம்பி அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

என் அன்புக்குரிய திரு. சி. சக்திக்கிரீவன் இயல்பிலே தெய்வீகத்தன்மையுள்ள புண்ணிய சீலனாய்ப் பிறந்தவர், இந்துசமயப் பேரவைச் செயலாளராகிக் கடமையாற்றிக் கொண்டு இறைவனடி மறவாச் சிவச்செம்மலாகத் திகழ்கிறார். சைவத் தமிழிற் பேசுவதற்குத் திறமையுள்ளவர். தில்லைச் சிவபெருமானில் அவருக்குத் தடித்த பக்தி – அந்தப் பக்தி அப்பெருமானைப் பாட வேண்டுமென்னும் ஆசைக்கு வழிகாட்டியது; பக்தியில் எழுந்த பாக்கள் சிவன் அருளமுதம் ஆக வெளிப்பட்டது. யாப்பமைவுறத் தந்த இப்பாடல்கள் சிவனருளால் எழுந்தவையாகவே காணப்படுகின்றன.

"அணுவை யார்க்கும் தெரியாததத்துவனை" என்று அப்பரடிகள் தான்பாடிய 6ம் திருமுறையில் முதலாம் பாடலில் குறிப்பிடுகிறார். விஞ்ஞானிகள் அணுவைப் பிரிக்கமுடியாதென்ற நிலைப்பாட்டில் இருந்தனர், ஆனால் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த இக்காலத்தில் அணுவை இரண்டாகப் பிரிக்கலாம் எனக்கண்டிருக்கிறார்கள். அவை புறோட்டன் (Proton) எலக்ற்ரோன் (Eleetron) என்பவை. புறோட்டன் செவ்வொளியானது. எலக்றோன் நீல நிறமானது செவ்வொளி சிவமாகவும் நீல நிறம் சிவகாமியுமாகத் தில்லையில் ஆடுவதே தில்லைக்கூத்தின் தத்துவமாகும். இதனை யார்க்கும் தெரியாத தத்துவன் என்றார் அந்தப் புண்ணியராகிய திருநாவுக்கரசர். ஒரு அணு இரண்டாகப் பிரிகிறது.

மந்திரங்களின் ஒலி சக்தி – அதன் பொருள் சிவம்; ஒலியும் பொருளும் கூடிய சொல் வடிவமே சிவன் திருமேனியாகும். ஒலியலைகள் மூன்று வளைவுகளாக உள்ளன. இடைவளைவு கூடுதலாகவும் கழுத்து முழங்கால் வளைவு சிறிய (இலேசான) வளைவுகளாகவும் இருக்கும். இவ்வளைவின் தொகுப்பே, சிவகாமியின் திருவுருவம். மேற்கூறிய தத்துவங்கள் ஞானிகளால் ஆராய்ந்து சிந்தித்துணர வேண்டியவை.

பஞ்சாட்சரத்தில் "ய" எழுத்து உயிர்– எம்பெருமான் உயிர்களை அவ்வவ்வழியில் நினைவூட்டுவதற்காக கூத்தாடுகிறான். அந்தக்கூத்து - ஊனநாடகம், ஞானநாடகம் என இரு வகைப்படும்.

"ஊன நடனம் ஒருபால் ஒருபாலா
ஞான நடம் தான் நடுவே நாடு"

என்பது திருவருட்பயன்.

ஒரு நடனம் உலக இன்பம் பெறுவதற்கும் – மற்ற நடனம் ஆன்மாக்களை வீடுபேறு பெறுவதற்கும் உதவுகின்றன.

" ஆர்த்த பிறவித்துயர்கெட நாமார்த்தாடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்

என்கிறார் மணிவாசகப் பெருமான்.

இத்தகைய அற்புத நடனமாடும் நடராசப் பெருமானை அல்லும் பகலும் சித்தத்திருத்தி வாழ்கின்ற என் பராட்டுக்குரிய சி. சக்திகிரீவன் சிவனருள் அமுதம் என்னும் தலையங்கத்தில் பாடிப்பரவியுள்ளார். இப்பாடல்கள் அவரது மனத்திலிருந்து பெருகிய அருவிகளாகும் அருவிகள் பல ஆறாய்ப் பாய்வது போல அவரது பாடல்கள் எல்லாம் சிவனருளமுதத்தை அள்ளிப் பெருகிச் செல்வதைக் காணலாம். அவரது மனதிலே எல்லாத் தெய்வமும் சிவனே என்பது உறுதியாகிவிட்டது. என் தெய்வம் உன் தெய்வம் என்று மாறுபடுபவருக்கு அவரது இந்தப் பாடல் விளக்கம் தருகிறது.

" சிவனேநின் அருட்டிறத்தைச் சிறிதேனும் அறியாமல்
அவமே விளம்புகிறார் அறிவே மயங்குகின்றார்
புவனாதி யண்டமொடு கணபதி நீ கந்தனும் நீ
சிவசக்தி நீ அரி நீ திரண்டபரம் பொருள் நீயே"

அருமையான விளக்கம். இதை அறிவார் அறிவார். இத்தகைய சிறப்பாக எல்லாப்பாடலுமே தத்துவார்த்தமாக அமைந்துள்ளன. இந்தச் சிவனருளமுதத்தைப் பாடுவதற்கு முன்னைத் தவம் செய்தவர் அன்புச் செல்வன் சக்திகிரீவன். அவரது சித்தங் கனிந்த அமுதக் கவிதை வெளிப்பாடு மேன்மேலும் வளர வேண்டும். அவர் ஒரு அருட்புலவனாய்த் திகழவேண்டுமென வாழ்த்தி இந்நூலைப் படிப்போர் எல்லாம்வல்ல சிவபெருமானின் திருவருளால் இனிய பேரின்ப வாழ்வும் இம்மைச் சுகமும் சிறந்து வாழ்வார்களாக எனப்பிரார்த்திக்கிறேன்.

அன்பன்
அருட்கவி சி. விநாசித்தம்பி

உ

சிவமயம்

முதுபெரும் புலவர்

## திரு. வை. க. சிற்றம்பலம் அவர்கள்

வழங்கிய

# சிவனமுதத் திருப்பாடல் வாழ்த்து

1. உலகத்தை ஆட்டி வைப்பாள்
உத்தமி சக்தி யென்றே
மலர் பெரும் மரபு தித்த
மகன்சக்தி கிரீவன் தானே
புலர்வதன் முன்னெ ழுந்து
பொன்னவள் பாதம் போற்றி
நலமுற வாழ்வர் மேலாம்
நற்சிவன் கழல்ம றாதே.

2. எழுஆ லயங்கள் கொண்ட
ஏழாலைப் பதியு தித்து
வாழுநா ளெல்லாம் நன்றாய்
வளர்சக்தி கிரீவன் தானே
சூழுநாள் எல்லாஞ் சைவ
சிறுவரில் லத்தைப் பேணும்
ஊழின்கை தடியைச் சேர்ந்து
உள்ளத்தைப் பறிகொ டுத்தார்.

3. ஆறுஆ தாரம் வைகும்
அருள் திரு முதல்வர் போற்றி
வீறெழு குண்ட லினி
விரைமலர்ச் சகஸ்ர தளத்தில்
பேறெழும் ஒளியிற் புக்கு
பிரானது காட்சி யெல்லாம்
நீறொடு கங்கை கொன்றை
நிறைந்திடக் கண்டு கண்டு.

4. அயனொடு திருமால் காணா
ஆதியாஞ் சோதி தானே
பயனுற இலிங்க மாகிப்
பாரினி லமர்ந்த வாறும்
நயனுறு மன்பர்க் காக
நல்லவற் புதங்கள் செய்து
துயரற இருந்த வாறும்
சுருதிபோற் பாட லுற்றார்.

5. கடிமலர் நீர்கைக் கொண்டு
கருத்துடன் சிவலிங் கத்தின்
அடிமுதல் முடியின் காறும்
அமைந்தமஞ் சனமு மாட்டி
படிகொள அலங்க ரித்துப்
பலஅமு தவியும் ஊட்டி
விடிவுற அன்பின் பாடல்
விரித்தனர் அமுதா யன்றே.

6. நாடெல்லாந் திரியுங் கல்லா
நரர்களைப் பாடா ராகி
ஏடெலாம் படித்துங் காணா
இறைவனைச் சிவனைக் காணும்
பீடுலாம் விருப்பால் போற்றுப்
பெருந்தமி ழமுதப் பாடல்
வீடுலா மளவுஞ் சொன்னார்
வேதமாய் விளங்கத் தானே.

7. வேதசித் தாந்தத் தோடு
மிகுசைவ வைண வங்கள்
போதமாய் விளங்கும் இந்து
சமயப்பே ரவையைச் சார்ந்து
நாதமா யொளியாய் நிற்கும்
நாதனைச் சிவனார் தன்னை
ஏதமில் லுணர்விற் கண்டு
ஏத்தியே பாடி னாரே.

8. தொண்டர்சீர் பரவு மாற்றால்
தொழுதிடும் புகலி வேந்தை
கண்தனை இடந்த மைத்த
கண்ணப்ப ரோடு மற்றும்
சண்டீசர் பூச லாரைச்
சார்சில வடியார் தம்மை
பண்டுகை தடிச்சி வன்றன்
அமுதத்திற் பதித்தார் பாடி.

9. அமெரிக்க சுவாமி யங்கு
அழைத்திட உடன்ப டாதே
தமரென அடியா ரோடு
தங்கியே தொண்டு செய்யும்
சமநிலை யுடைய ரான
சைவராம் சக்தி கிரீவன்
இமயமாய்த் தொண்டு செய்து
யாண்டுமாய் நிற்கின் றாரால்.

10. சிவனரு ளமுதப் பாடல்
தொடர்ந்தென்றும் பாடி வந்தால்
பவவினை யகன்று போகும்
பாடுவோர் சிறந்து வாழ்வார்
தவவினை கூட்டப் பாடித்
தந்தசத் திக்கி ரீவன்
நவமுற மேலும் பாட
நாடிநான் வாழ்த்து கின்றேன்.

புலவர் — வை. க. சிற்றம்பலம்

ௐ
சிவமயம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி

# பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்

வழங்கிய

# பாராட்டுரை

சிவத்திரு. சிவ. சக்திகிரீவன் இயற்றிய 'சிவஸ்ரீ அருளமுதம்' 102 பாடல்களைக் கொண்டமைகின்றது. பிள்ளையாருக்குக் காப்புப் பாடித் தொடங்கும் இந்நூல் சிவனை மனநிறைவுடன் மகிழ்ந்து பாடி ஏத்துகின்ற பாடல்களையுடையதாக அமைகின்றது.

இறைவனுடைய அருட்செயல்கள், கோலவழகு ஆகியவற்றைப் பல சந்தர்ப்பப் பாடல்களிலே கவிஞர் வடித்துள்ளார்.

"எண்ணரிய அருள்சுரக்கும் இமயத்து வீரனென்றும்
பண்ணரிய கவிகேட்டுப் பசிதீர்க்கும் நாதனென்றும்"

சிவனுடைய அருட்செயல்கள் குறிப்பிடப்படுகின்றன.

"தேனார் மலர்க்கொன்றை செஞ்சடைமேல்
அணிந்துதுள்ளு மானார் கையேந்தி" என்றும்

"ஆறினொடு திங்களியின் சாறுதலை தோய்ந்த
சேறினொடு தனிநின்றான்" என்றும்

"செஞ்சடையான் சேல்விழியாள் சேர்ந்தாடு மன்றுடையான்
நஞ்சுடைய கண்டத்தான்" ....... என்றும்

இறைவனுடைய கோலவழகு பேசப்படுகின்றன.

சொற் பஞ்சமில்லாமல் இனிமையான சந்தங்களூடாக சிவன் மீதுள்ள பக்தி புலப்படுத்தப்படுகின்றது. இவை யாவும் மரபு வழிக் கவிதைகளாகவே அமைந்துள்ளன.

கவிஞர் சிவபிரானை மனக்கண்ணில் கண்டு தரிசித்தமையை 26 ஆவது பாடல்

பேயும்சூழ வருவார் பெரியபெருமை யுடையார்
நாயும்சூழ வருவார் நம்பேர் இதுவென்றுரையார்
ஆயும்பூவும் கொண்டு அரற்றும் அடியார்முன்னே
தோயும் திங்கள் சுமந்து தோன்றி நிற்பார்தானே.

என்கிறது.

ஆக நெடு தூரம் சென் றாடி யாடி
பாக மொடு பண்கலந்து பாடிப் பாடி.

என்றும்,

''நேசனே எமது வினை போக்கிடும் தீதனே''

என்றும் பல சந்தங்களிலே கவிஞர் பாடல்களை அமைத்துள்ளார்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்பவன்
இறைவன்

என்பதை,

உறைகுவான் செம்பொன் கோயில்
உள்குவார் உள்ளத்துள்ளே.

என்ற அடியும்,

'சீலங்கள் உள்ளான் சிந்தையிலும் உள்ளான்'

எனும் அடிகளும் இறைவன் சிந்தையாற் தொழப்பட வேண்டியவன் என்பதை விளக்கி நிற்கின்றன,

இவ்விதம் சிவபிரானின் அருட்பொலிவை அமுதமான கவிதைகளால்த் தரும் திரு. சிவ. சக்திகிரீவன் பராட்டுக்குரியவராவர்.

———

உ

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

இந்துநாகரிகத்துறைத் தலைவர்

# பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்

அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

சிவபெருமான் உலகத்தோடும் உயிர்களோடும் தொடக்கமும் முடிவுமின்றி கலந்து நிற்குந்தன்மையால் யாவும் சிவமயம் என்ற நிலை தோன்றுகிறது. இதனையே தாயுமானவர் பார்க்குமிடத்து எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே என்று குறிப்பிடுகின்றார். அறிவே வடிவாகி சத்துப் பொருட்களிலும் அசத்துப் பொருள்களிலும் ஒப்பற்ற தலைவராகிய சிவபெருமான் வேறறக் கலந்து நிற்பதையே அருளாளர் நிகரிலிறை நிற்கும் நிறைந்து எனப்போற்றுவார். சிவபெருமானுடைய கருணைக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர். இறைவன் தாயினும் சாலப்பரிந்து அன்பர்களுக்கு அருள் சுரப்பான். கற்பனை கடந்த சோதியாக அளவற்ற கருணையே வடிவாக விளங்குபவர் சிவபெருமான். அவர் ஆணவ இருளில் மூழ்கிக் கிடக்கும் ஆன்மாக்களுக்கு தனு கரண புவன போகங்களைக் கொடுத்து வாழ்விக்கின்றார். அனைத்தையும் ஆன்மாவின் உறுதிக்காக உய்வடையும் பொருட்டுப் படைத்து காத்து அழித்து மறைத்து அருளுகின்றார். இவ்வைந்து தொழில்களும் சிவபெருமானின் அருள் காரணமாக நடப்பன.

இறைவனது கருணைக்குப் பாத்திரரான சிறந்த அடியார்கள் உள்ளத்தில் அவர் தேனூறி நின்று பிறந்த பிறப்பறுப்பவர்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடி சேரா தவர்.

என்ற வள்ளுவனது குறள் வழிக்கேற்ப இறைவனை எமது உள்ளத்தில் நினைந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபடவேண்டும். இவ்வரிய நிலையை அடைய அருளாளர்கள் காலங்காலமாகப் பக்திமணங்கமழும் அருமையான பனுவல்களை

ஆக்கிச் சைவ உலகுக்கு அளித்துள்ளனர். அரிய பிறவியாகிய மனிதப்பிறவியைப் பெற்ற அனைவரும் சிவனது அருளாகிய அமுதத்தைப் பருகிப் பயனடைய வேண்டியவராவர். அத்தகைய நிலைக்கு எம்மை ஆற்றுப்படுத்தும் நூல்களின் வரிசையில் அன்பர் சி. சக்திகிரீவனது படைப்பாகிய "சிவனருளமுதம்" என்ற இக் கவிதை நூல் இடம்பெறுகின்றது. அன்பர் சக்திகிரீவன் சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் ஏழாலையைத் தமது வாழ்விடமாகக் கொண்டவர். அவர் தமது கடமைகளுக்கு மத்தியில் ஆத்மார்த்த நிலையிலும் பரார்த்த நிலையிலும் ஆத்மீக வாழ்வு பற்றிச் சிந்திக்கும் பண்புள்ளார். அத்தகைய சிந்தனையின் வெளிப்பாடே சிவனருளமுதம். இந்து சமயப் பேரவையின் செயலாளராகவும் விளங்கி சமயப்பணியாற்றிவரும் இந்நூலாசிரியர் தமது நீண்டகால சமய அனுபவங்களையும் பன்னிரு திருமுறைகளில் இருந்து பெற்ற சமய அறிவையும் ஒன்றிணைத்து இப்பாடற் தொகுப்பை உருவாக்கியுள்ளார் எனில் மிகையில்லை.

இக்கவிதை நூலினை 102 பாடல்கள் அணிசெய்கின்றன. இப் பாடல்களில் தேவார, திருவாசக சிந்தனைகளின் அடிப்படையில் சிவனது திருவருளின் பெருமை பேசப்படுகிறது. ''அருளேயென அகத்தாடிடும் அன்பே'' என்றும் ''ஞானவனே என்னுள்ளத்துறைகின்ற நாயகனே'' என்றும் "என் இதயத் தெழுந்தருளி எல்லையிலாத் தனிக்கூத்து மலர்ந்தாடும் எம் மிறையே'' என்றும் அடியவர்கள் உள்ளத்தில் உள்ளொளியாய் நின்று அருள்புரியும் சிவனது அற்புதத்தைப் போற்றுகின்றார். எம்பெருமான் எம்துயர் களைந்து அருள் சொரியும் கருணைக்கு நன்றி செலுத்தும் வகையில் ''நம்பனை நாம் வாழ்த்துவமே'' என வாழ்த்துகின்றார். மணிவாசகர் சிவபுராணத்தில் ''நமச்சிவாய வாழ்க'' என எம்பெருமானை வாழ்த்தும் மரபு இப் பாடல்களில் தொனிக்கின்றது.

சிவனே! சிவனே! என வாழ்நாளில் சிந்திக்கின்ற காலமெல்லாம் தவக்காலமாகும். அவமே எமது வாழ்நாளைப் போக்காது நலமே போக்குதல் வேண்டும் என்ற கருத்தை பின்வரும் பாடல் மூலம் எடுத்துக்காட்டுகின்றார் ஆசிரியர்.

தவமே இருந்து நல் தத்துவம் காட்டும் தனிப்பெருமான்
அவனே இருந்தருள் அற்புதம் செய்பெரும் ஆதவனே
இவனே எமக்கருள் நல்இனியான் இத்த ஞாலமெல்லாம்
சிவனே எனநிலை வார்க்கருள் செய்கின்ற சிற்பரனே.

(பாடல் 7)

இப்பாடல் சிவனது திருவருட் சிறப்புக்கு எடுத்துக்காட்டு.

இக்கவிதை நூலில் சைவசித்தாந்த விழுமியங்கள் ஆங்காங்கு தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். "முத்திக்கு வித்தான முழுமுதலே முன்னவனே" என்ற அடி பதியிலக்கணத்தைக் கூறும், சிவஞான சித்தியார் சிவனது பெருமையைக் குறிப்பிடுமிடத்து.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்ற சைவசித்தாந்த சிந்தனையை

"புவனாதி யண்டமொடு கணபதிநீ கந்தனும்நீ
சிவசக்திநீ அரிநீ திரண்டபரம் பொருளுநீயே'

என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்துகின்றார். இதுபோன்று பல பாடல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு திருவருள் பாலிக்கும் திருநோக்கில் தமது அருளால் திருவுருவங்களைத் தானே கொள்வர். அவையனைத்தும் அருளுடம்பு; அருளலையே நோக்காகக் கொண்டவை. 'ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது' என்று இறைவனைப் போற்றுவார் தாயுமானவர். சிவபெருமானது அருட் திருமேனிகளின் சிறப்பை இந்நூலாசிரியர் பல பாடல்களின் வழி எடுத்துக் காட்டுகின்றார்,

சிவலிங்க மகத்துவம், திருக்கூத்து தரிசனம், மாதொருபாகனார் கங்காதரர், காலசம்ஹாரர், விஷாபஹரணமூர்த்தி போன்ற பல வடிவங்களின் பெருமைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. திருக்கூத்து தரிசனம் பலபாடல்களில் போற்றப்பட்டுள்ளது.

எல்லையிலாத் தனிக்கூத்தை
இணைந்தாடும் எம்பிரான்
தொல்லைதரு எமதுவினை
துடைத்துவரு பவமொன்றும்
இல்லையினி இல்லையினி
என்றியம்பிக் கைகாட்டும்
தில்லையுடைத் திருநடனம்
சிந்திப்பார் இனிப்பிறவார்

என்ற பாடல் வழி சிவனது திருநடனக் கோலத்தை வழிபடுவோருக்கு பிறவியில்லாத முத்திநிலை கிட்டும் என்ற கருத்து

வற்புறுத்தப்படுகின்றது. பல்வேறு புராணக் கதைகள் பல பாடல்களின் பொருளாக அமைந்துள்ளன. சிவனடியார் பெருமையினையும் தொண்டின் சிறப்பினையும் நூலாசிரியர் நன்கு எடுத்துக் கூறுகிறார்.

இறைவனுக்குரிய கிரியைகளின் மேன்மையையும் ஆசிரியர் இடைக்கிடை வற்புறுத்துகிறார். சிவநெறியின் விழுமியங்களை இளந் தலைமுறையினர்க்கு எளிமையாகவும் தெளிவாகவும் உணர்த்தும் இப்பாடல்களில் எதுகை, மோனை, ஓசை, நயம் மிளிர்கின்றன. சைவ மரபுக்கேற்ற வார்த்தைகள் பாடல்களின் தரத்தை காட்டுகின்றன. 'சிவனே எமக்கிறைவன் சிவையே எமக்கிறைவி' என்ற சமய உண்மையே இந்நூலின் தொனிப் பொருளாகும். சிவநெறியின் வழி சிவனருள் என்னும் அமுதத்தினைப் பருக வழியமைக்கும் இந்நூலினை சைவ உலகம் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

அன்பர் சக்திகிரீவன் சிவநெறியை பரப்பும் நோக்கில் ஆக்கியளித்துள்ள இந்நூல் சைவ உண்மைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. 'மேன்மைகொள் சைவ நீதி' உலகெங்கும் பரவ வகை செய்யும் முயற்சியின் வெளிப்பாடாக அமையும் இந்நூலில் நோக்கம் நிறைவேற எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருள் பொலிவதாகுக.

அன்பன் சக்திகிரீவன் மேலும் இதுபோன்ற ஆக்கங்களை உருவாக்கி இளம் தலைமுறையினரின் சமய நம்பிக்கைக்கு உறுதுணையாக விளங்கவேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பாடவேண்டில் அவன் புகழே பாட வேண்டும்
ஆடவேண்டில் அவன் நடனம் ஆடவேண்டும்
தேடவேண்டில் சிவனடியே தேடவேண்டும்
நாடவேண்டும் நமச்சிவாய நாவே

என நாமும் பாடி சிவனருளமுதத்தைப் பருகி மகிழ்ந்து நலம் பெறுவோமாக.

இந்துநாகரிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி
09 - 02 - 99

ப. கோபாலகிருஷ்ணஐயர்

உ

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

மெய்யியல் துறைத் தலைவர்

பேராசிரியர் நா. ஞானகுமாரன் அவர்கள்

வழங்கிய

# முன்னுரை

சிவனை முழுமுதற் கடவுளராகக் கொண்டமைந்த நெறிகள் சைவம் என அழைக்கப்பெற்றன. சைவமென அழைக்கப்பட்ட நெறியிலும் பல பன்னெடுங் காலத்திற்கு முற்படவே சிறப்புற்று இருந்தன. சில காலத்தில் கரைந்தனவாயின. சில இன்றும் சிறப்புற்றுத் திகழ்கின்றன. சைவசித்தாந்தம், காஷ்மீர சைவம், வீர சைவம், ஆகியன ஆழ்ந்தகன்ற நிலையில் மக்கள் மனதில் ஆழப்பதிந்து ஆன்மீக வாழ்விற்கு வளப்பம் சேர்ப்பதாக விளங்கி வருகின்றன.

இலங்கைத் திருநாட்டிலும் இந்தியாவின் தென்னகத்திலும் சிவனின் சிறப்பைப் போற்றும் சைவசித்தாந்தத்தின் காத்திரமான வளர்ச்சியின் தொடர்ச்சியை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இலங்கைத் திருநாட்டில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முனீஸ்வரம், நகுலேஸ்வரம், வண்ணை வைத்தீஸ்வரம், ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கும் காரைநகர் சிவன் ஆலயம் ஆகிய திருத்தலங்கள் சிவன் புகழுக்கு கலங்கரைவிளக்காய் விளங்குகின்றன. இவற்றுள் சில திருஞானசம்பந்தரினாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் பாடல் பெற்ற சிறப்புடைய திருத்தலங்களாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு சிறப்புடைய தலங்கள் விளங்கிய போதிலும் ஊருக்கு ஊர் சிறிய பல, ஆனால் சக்தி மிக்க சிவன் தலங்களும் விளங்குதல் குறிப்பிடத்தக்கதாகும் இவ்வாலயங்கள் அவ்வூர் மக்களின் அருட் செழிப்பிற்கும் ஆன்மீக எழிச்சிக்கும் இலைமறைகாயாய் - காரணமாய் அமைந்தது விளக்குகின்றன. இவ்வாறு அமைந்த தலங்கள் பலவற்றிற்கும் அவ்வப்போது பதிகங்கள் பலவும் பாடப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆகக் குறைந்தது ஊஞ்சற்பதிகங்கள் இல்லாத ஆலயங்கள் அரிதெனும் வகையில் இவை அமைந்திருக்கின்றன.

மேலும் சிற்றூர்களில் எழுந்தருளியிருக்கும் இறைவன் இறைவிகளின் அருளூட்டலினால் 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' எனும் கூற்றிற்கமைய எழுந்த பாடல்களாகப் பல பாடல் திரட்டுக்கள் தொகுப்புக்கள் அமைந்திருப்பதும் நுணுகி ஆராய்வோர்க்குப் புலனாவதொன்றாகும்.

ஏழாலையம் பதியானது ஆன்மீக செறிவும் கல்விப்புலமையும் நிறைந்த கிராமங்களிலொன்றாகும். கல்வி கேள்விகளிலும் சமய சமூகத்தொண்டிலும் உயர்ந்த பலர் வாழ்ந்த சூழலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திரு. சி. சக்திகிரீவன் ஆவர். தன் பெயரிலேயே ஆன்மீகச் சக்தியை உள்ளீடாகப் பெற்றவர் என்பதனால் போலும் திரு.சி.சக்திகிரீவனாக வாழ்வது காண்கின்றோம். அவ்வூர் மண்ணின் வளம் போல ஆன்மீக ஈடுபாடும், இறைவழிபாடும் கொண்டவராகத் திகழ்கின்றார். சிவனில் தீராக்காதல் கொண்டு

காம மகற்றிய தூயனடி சிவ
காம சுந்தரியின் நேசனடி எனும்

கூற்றுக்கிணங்க இல்லற பந்தத்தினை அகற்றிச் சிவனிடம் மாறா நேசம் கொண்ட சக்தியாக வாழ்ந்து வருபவர் திரு. சி. சக்திகிரீவன் என்றால் மிகையாகாது. அவர் உள்ளத்தில் உதித்த சிவனின் நேசம் தங்குதடையற்ற கவி வெள்ளமாகப் பெருகி 'சிவனருளமுதமாக' பொலிந்திருப்பதனை அறிகின்றோம்.

இச்சிவனருளமுதம் சிவனின் தனிப்பெருஞ் சிறப்பினையும் சிவவழிபாட்டின் உயர்வினையும் எளிய தமிழில் எடுத்துரைப்பதோடு நில்லாது அனைத்து உயிர்களின் உயர்வுக்கும் வழிப்படுத்துவதாக அமைகின்றது. கடுந்தமிழில் கவியைச் சமைக்காது சந்தத்தோடு இசைக்கவல்ல வகையில் "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்பதற்கமைய அருளமுதம் அமைந்திருப்பது சிறப்பிற்குரியதாகும். பண்ணோடு பாடல் அமைய வேண்டிய ஆசிரியரின் கருத்தானது "பண் கலந்து பாடிப் பாடி— முத்தி நிலை பேணிப் பேணி—" எனச் சுட்டும் பாடலடிகளால் வலியுறுத்தம் பெறுகின்றது. சிவன் அருள் வேண்டி சிவனருளமுதம் படைத்த ஆசிரியரின் தேவார பாராயணத்தின் பயனை அழகுறப் பாடலில் வலியுத்துதல் கவனிக்கத்தக்கதாகும். 'சொல்லரிய திருமுறையின் தோத்திரங்கள் சொன்னால் நற்பெருமை, ஞான நெறி, வீடுத்தருவானே –' என எடுத்தாள்வது ஆசிரியரின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவனவாகும். மேலும் 'பாட வேண்டில் அவன் புகழே பாடவேண்டும்' எனச் சுட்டும் அடிகள் இதனை அழுத்தி நிற்கின்றன.

பரமசிவனின் உண்மையை இலகுவில் அறிந்து கொள்வது இலகுவானதன்று சொல்லாலும் பொருளாலும் அளவையாலும் தொடர ஒண்ணா அருள் நெறி எனத் தாயுமான சுவாமிகள் குறிப்பிடுவது போல் இறையுண்மையானது அளவையியற் பிர மாணத்தினால் அறிதற்கரிதானது இக்கருத்தினையே சம்பந்தப் பெருமானும்,

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா... என எடுத்தாள்வார்

இதே கருத்தினை காலத்திற்கேற்ப 'அறிவியிற் புலமைக்கெட்டா அகக்காட்சிக் கினியாராகி ...' எனச் சுட்டும் தகைமை சித்தாந்த உண்மையினை ஆசிரியர் அழகுற மனங்கொண்டமை புலனா கின்றது. இவ்வாறு நல்ல பல கருத்துக்களை நயம்படப் பாடி சிவனருளமுதமானது எல்லோரும் பாடிப் பாடிப் பயனடைய வல்லதொரு தோத்திரமாலை போல் அமைந்துள்ளதெனலாம் பாடலின் இறுதியில் சுட்டுவது போல இவ்வருளமுதை உளமார உண்பவர்கள் சிவனடியைச் சேர வழிவகுக்கும் என்பது திண்ணம். சிவன் நாமம் சிறக்கவும், நெறி செழிக்கவும் சிவ. சக்திகிரீவன் பணி மென் மேலும் பரவுவதாக.

**பேராசிரியர் நா. ஞானகுமாரன்**
*தலைவர், மெய்யியல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*திருநெல்வேலி.*

உ

சிவமயம்

# முகவுரை

எங்கும் நீக்கமற நிறைந்து வியாபகமாக இருக்கும் சிவபிரான் நிட்களமாகவும், சகளமாகவும், நிட்களசகளமாகவும் அவரவர்க்கு அருள் பாலிக்கும் பெருமைக்குரியவன், கருணைக் கடலான சிவபிரானின் திருவருட் பொலிவை அவரவர் தம்மிற்றாம் அறிந்து கொள்வதே இறையனுபவமாகும்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டர் தொகை என்ற பதிகத்துள் அறுபத்து மூவரைப் பாடியதோடு ஒன்பது தொகையடியார்களையும் பாடியுள்ளார். அவர்கள் தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர் அப்பாலும் அடிசார்ந்தார். ஆகியோர் ஆவார். இவர்கள் அனைவரும் இறைவனை ஞானத்தால் தொழுத பெருமைக்கும், தொழுவார்கள் தொழக்கண்டு அவ்வழி தொழுத பெருமைக்கும் உரியவர்கள்.

ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தால்உனை நானுந் தொழுவனே.

எனும் அப்பர் சுவாமிகளின் அருளிப்பாடல் சிவபெருமான் ஞானத்தால் தொழப்பட வேண்டியவன் என்பதையும் அவ்வழி தொழுவார் வழி நின்று வழிபடுவதையும் மிகப் பெருமைப்பட எடுத்துக் கூறியுள்ளது.

இறைவனை அகத்தில் கண்டு கொள்பவனால் புறத்தும், புறத்துக் கண்டு கொள்பவனால் அகத்தும் கண்டு கொள்ள முடிகிறது. அகத்திலும் புறத்திலும் காண்பதே ஆனந்தமென்பதே அது. இது அவரவர் ஆன்மார்த்த பரார்த்த வழிபாட்டில் கண்டின் புறுவதும், அனைத்தும் சிவனருளால் நடைபெறுபவை என்பதை உளம்பூரிக்கச் சிந்தித்து வாழ்வதும் அவரவர் ஆத்மீக மன எழுச்சியைப் பொறுத்த தொன்றாகும். அகத்தும் புறத்தும் கண்டானந்திக்கும் பேறு எல்லோருக்கும் கைவரப் பெறுவது

மல்ல. இதுவோர் பரீட்சைப் போட்டி முயற்சிக்குட்பட்டுமில்லாத தொன்று. சிவனருளால் ஏற்பட்ட அனுபவங்களை வாய்விட்டுச் சொல்லுமளவில் அஃது அமைந்ததுமல்ல, அஃது எப்படி, எத்தரம் என்று இலங்கு நூல் வழியல்லாத நூலறிவோடு நின்று வெறும் புல்ப் புலனில் விசாரணைக்குட்படுத்தி உசாவி கண்டு கொள்வது மல்ல, அது மிகக் கடினமானது, அஃது எப்படி எனின் ஆமை மயிர்க் கம்பளம் போன்றது. அது எப்படி யெனச் சொல்வது இன்னொருவருக்குச் சொல்லுங் கால் இரகசியமாகவும் அமைந் துள்ளது. அனுபவப் பொருளை அனுபவத்தால் அறிவது தான் இரகசியம்.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமா றெங்கனே

என்றும் திருமந்திரத்தில் திருமூலர் விளக்கியுள்ளார்.

ஒருவன் ஒரு பொருளின் வடிவினை முகக்கண் கொண்டு பார்க்க முடியும். ஆனால் அப்பொருளின் அகப்பண்பை அறிவுக் கண்ணாலேதான் பார்க்க முடியும். அகக்கண்ணால் காணும் அவ் வகப் பண்பை புறக்கண்ணால் பார்க்க முற்படுவோர் மூடராவர். அகக்கண்ணால் காணும் சிவசக்திப் பேற்றை அகத்தில் கண்டு கொள்வதே ஆனந்தமும் ஆகின்றது. இது பேரின்ப மயமானது. இது இன்னொருவர்க்கு கூறமுடியாதது. இப்பேரின்பத்தை இன் னொருவருக்கு விளங்க வைப்பதென்பது தன்னுடைய அன்பு மகளுக்கு தாய்தன் மணாளனோடு வாழ்ந்த இன்ப சுகத்தை சொல்லுதலில் ஏற்பட்ட சங்கடம் போன்றே அமையும். இவ் வின்பசுகத்தை மகள் பருவமெய்தியதும் உரிய மணாளனோடு இணைந்து வாழச் செய்து அவ்வின்பத்தை அறிந்து கொள்ளச் செய்வது போன்றதே இன்றையனுபவம் பற்றி இன்னொரு வருக்குக் கூறுவதென்பதைத் தெளிவுபடுத்துகிறார் திருமூலர்.

தியானபவனை வழிபாட்டில் சிவபிரான் திருவருள் சம்பந்த மாக புத்திதத்துவத்தைக் கடந்து எது அவதரிக்கிறதோ அது அச்சிவதர்சனத்தின் மேன்மையைப் பிரதிபலித்தும் விடுகிறது.

அனைத்து ஜீவராசிகளிலும் இடையறா அன்பு மயமாக இருக்கும் சிவபிரான் எமக்கு முன்புமாய் பின்புமாய் எமக்குள்ளு மாய் நின்று நம்மனைத்துச் செயல்களையும் நிறைவேற்றுகிறான் என்று நாம் உணராமல் வாழ்நாளை வீணடிக்கின்றோம்.

''வாழி தென்னவுறக்கமோ வாய்திறவாய்'' என மணிவாசகர் திருவாசகத்தில் சிவபிரான் சாந்நித்தியம் உறக்கநிலை அடையா திருக்க வேண்டிப்பாடியுள்ளமை காணத்தக்கது.

"சரணகமலாலயத்தை அரை நிமிட நேரமட்டத்தில் தவ முறையே தியானிக்க' அறியாதிருக்கிறோம். என பாடுகிறார் அருணகிரியார். இறைவனை நாளும் அரைநிமிடமாவது தியா னிப்பவர்கள் மேலானவர்கள் அதைவிட மேலானவர்கள் சதா இறை சிந்தனையோடு வாழ்பவர்கள் அதைவிட மேலானவர்கள் சதா ஈஸ்வர அர்ப்பணத்தோடு வாழ்பவர்கள் இவையனைத்தும் முன்னைய தவம் சம்மந்தப்பட்டமைந்திருப்பது அவரவர் தத்தம் நிலையில் அவரவர் வழிப்பாட்டை அமைத்துக் கொள்வதில் கண்டு கொள்ளத்தக்கது. எது எப்படியிருப்பினும் இறைவனை ஒரு போதாவது நினைக்கும் பேறு கிடைக்கின் அது பெரும் பேறென்பதும் உண்மை. ஆசிரியர் கணிதத்திற்தரவுகளைத் தந்து அதற்கான விடையைக் காணச் சொல்வது போல சிவபிரானும் தனு, கரண, புவன போவங்களை எல்லாம் அமைத்துத்தந்து இவற்றின் வாயிலாக பேறு எய்துவாயாக என்று அருளுகிறார்.

நானாரடி யணைவானொரு நாய்குத்தவி சிட்டிங்கு
ஊனாருடல் புகுந்தானுயிர் கலந்தானுளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களு மறியாததோர் வளமீந்தன னெக்கே.

இவ்வாறு மணிவாசகர் சிவபிரான் ஈந்தவளம் பற்றிக் கூறுகிறார். பதமுத்தி விளைந்த வானோர்களும் அறியாத பெரு வளமீயும் அருட்செல்வமாகிய சிவபிரானைச் சிந்தையில் இருத்தி வாழ்வதற்கு அவன் அருட்பொலிவை உணரவைக்கும் புறக்காட் சிகள் மிக அவசியமானவை என்பதோடு அவை அகக்காட்சியை உணர வழிசமைப்பவையாகவும் உள்ளன.

தியான இயக்கங்கள் சில ஆலயங்களும் பூசைகளும் வழிபாடு களும் அகவுணர்வை வளர்ப்பதற்கு அவசியமானவை அல்ல என்ற கருத்தை வெளியிடுகின்றன. தாம் அகத்தில் இறைவனைக் காண முயற்சிக்கின்றோம். அதற்காகப் பேரியக்கங்களை நடாத்துகின்

றோம். என்கின்றனர் புறப்புலனில் காணக்கூடிய இறைவனின் குறிகளையும் அடையாளங்களையும் உணர்வதன் மூலமே அகத்தின் தெய்வீகத்தை வளர்த்துக் கொள்ள முடியும். பொறிவாயில் ஐந்தவித்தாலொழிய அகக்காட்சி காணமுடியாது. சிவாலய வழிபாடு, விழாக்கள், சிவனடியார் தரிசனம் நல்லவற்றைக் கேட்டல், சிந்தித்தல், சிவ சின்னங்களணிதல் என்பன ஆத்மீகத்தை வளர்க்கும் அதியுயர் சாதனமாகும். சிவபூமியாகிய நமது மண்ணில் இயல்பான தெய்வீக உணர்வம்சங்களைப் பேண நாம் தவறியமையால் பெரும் சோதனைக்குட்பட வேண்டி இருக்கின்றது. இது எமது கன்மானுபவங்களோடு சம்பந்தப் பட்டிருப்பினும் சிவபிரானைப் பாடியும் பரவியும் நம் வினையைப் பாறச் செய்ய அனைவரும் முயல வேண்டும்.

எமது நாட்டில் மெய்யறிவாளரும் அநுபூதிமான்களும் வாழ்ந்து தெய்வீக உணர்வு பொருந்திய நூல்களை அவ்வப் போது செய்து வருவது பெருமைக்குரியதாகும்.

நம் வாழ்நாளில் ஏற்படும் சோதனைகளின் போதும் சிவபிரானின் திருவருட் செயல்களை கண்டின்புற்றோருமுளர். திருவருளை உணர்ந்து வாழ்ந்தோருமுளர். அவை நினைக்குந் தொறும், பேசுந்தொறும் இன்பமளிப்பவை அவ்வின்ப எழுச்சியின் வெளிப்பாடாக அவன் திருவருளை நினைக்குந் தொறும் எழுந்த பாக்களை சிவனருள் அமுதம் என்ற நூலில் வெளியிட திருவருள் கூட்டியுள்ளது.

இந் நூலுக்கு ஆசிச் செய்தி தந்த நல்லை ஆதீன குருமஹா சந்நிதானம் அவர்கட்கும் மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாத சிவாசார்யர் அவர்கட்கும் சித்தாந்தஞான பானு, சிவாகமஞானி சிவஸ்ரீ சோ. சுப் பிரமண்ய சிவாச்சார்யார் அவர்கட்கும்,

வாழ்த்துரை வழங்கிய எமது பேரன்பிற்குரிய இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மீகப் பெருவள்ளல் அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்கட்கும் வாழ்த்தெழுதிய முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம் அவர்கட்கும் பாராட்டுரை வழங்கிய

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கட்கும் அணிந்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கட்கும் முன்னுரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா. ஞானகுமார் அவர்கட்கும்,

இந் நூலை அச்சுப்பிழை பார்த்துதவிய பண்டிதர் க. நாகலிங்கம் அவர்கட்கும்,

இந் நூலை தக்கமுறையில் அச்சிட்டுதவிய ஏழாலை மகாத்மா அச்சக உரிமையாளர் திரு. ந. தெய்வேந்திரன் J. P. அவர்கட்கும், அச்சக ஊழியர்கட்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவையனைத்திற்கும் மேலாக இவற்றை எல்லாம் இயக்கி நடாத்தி வைக்கும் தில்லைப் பரம்பொருளின் திருவருட்டுணைக்கு நன்றி கூறி மனத்துளிருத்தி அவன் திருவருளே இப்பாடல்கள். இதிலுள்ள நன்மை, திமை, பெருமை, சிறுமை அனைத்தும் அவனுக்கே சமர்ப்பணம். அக்கருணைக்கடலின் திருவருள் எங்கும் அபரிமிதமாகச் சொரிந்து அனைவரும் மகிழ்வெய்திப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

சி. சக்திகிரீவன்

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

உ
சிவமயம்

# சிவனருளமுதம்

திருச்சிற்றம்பலம்

## காப்பு

முன்னை வினையனைத்தும் முற்றழிய மூதுலகின்
அன்னையுடன் அத்தனவன் ஆங்கணைந்து பெற்றெடுத்த
பொன்னனைய ஓங்காரப் பொருளான ஆனைமுகத்
தன்னவனே இந்நூலின் அனைத்துக்கும் காப்பாவான்.

## நூல்

விண்ணவரும் வேதியரும் துதிசெய்யும் வித்தகனே
பண்ணவரும் பண்டிதரும் பாடுகலை யானவனே
எண்ணவரும் எப்பொருளும் எமக்களிக்கும் எம்மானே
பெண்ணவனும் ஆணவனும் ஆனவருட் பெற்றியனே.
1

பெருமையனே பேரருளாம் பெண்பாகம் உடையவனே
அருமையனே ஆதிமுதல் அகிலமெலாம் ஆனவனே
ஒருமையனே ஓங்குசடை ஒளிர்மதியம் உடையவனே
இருமையனே இருளடர்த்தே இன்பமருள் நாயகனே.
2

தானவ னேஉயர் தத்துவ னேதனி நாயக னேபெரிய
வானவ னேபுவி யானவ னேதனி வண்மையில் வல்லவனே
கானவ னேகவி நாயக னேகறைக் கண்டமு மானவனே
தேனவ னேஅரு ளன்பரொ டாடிடும் சின்மயனே
அருள்வாய். 3

சோதிய னேஅடர் துன்னிருள்
தன்னைத் துரப்பவனே உமையாள்
பாதிய னேபக லோடிர
வாய்வரும் பண்ணவனே அமுதே
மாதவ னேஉயர் வானவ
ரேதொழும் மன்னவர் மன்னவனே
வேதிய னேயருள் விண்ணவர்
நண்ணொணா வித்தகனே அருள்வாய். 4

பொருளேயெனப் புலவோர்பலர் பேசிடும் புண்ணியனே
அருளேயென அகத்தாடிடும் அன்பனே ஆதவனே
இருளேயற மன்றிடை ஆடுநல் லீஸ்வரனே
மருளேயகல மலவினை தீர்த்திடெம் மாதவனே. 5

ஆனவனே அறமுத லாறங்கம் அன்றுரைத்த
தேனவனே தித்தித்துத் திளைக்கத் திகைப்பிக்கும்
மானவனே மன்னுபுகழ் கையில்மான் மழுதரித்த
ஞானவனே என்னுள்ளத் துறைகின்ற நாயகனே. 6

தவமே இருந்துநல் தத்துவம் காட்டும் தனிப்பெருமான்
அவனே இருந்தருள் அற்புதம் செய்பெரும் ஆதவனே
இவனே எமக்கருள் நல்லினியான் இந்த ஞாலமெல்லாம்
சிவனே எனநினை வார்க்கருள் செய்கின்ற சிற்பரனே. 7

தொல்லையரு வினையகல துன்பநிலை யடையாமே
வில்லையெடுத் தருள்வீர தீரவுன் புகழென்றும்
இல்லமென இதம்செய்தென் இதயத்தெ ழுந்தருளி
எல்லையிலாத் தனிக்கூத்து மலர்ந்தாடும் எம்மிறையே. 8

செஞ்சடையான் சேல்விழியாள் சேர்ந்தாடும்
மன்றுடையான்
நஞ்சுடைய கண்டத்தான் நல்லுலகு தானுய்ய
கஞ்சமலர்த் தாளெடுத்து கனகசபை களித்தாடும்
விஞ்சைபுரி விமலனவன் வீரியத்தை விளம்புவாம். 9

நடந்தரு நீள்கழலும் நன்னூலும் தோலும்
படந்தரு பாம்பும் பகீரதியும் படைத்து
விடந்தரு வினைகள் போக்கிவிண் ணவரஞ்ச
நடம்பல புரிந்தருள் நம்பனை நாம் வாழ்த்துவமே. 10

இருந்தவாறும் நல்லிமையோர் ஏதமின்றி நால்வேதம்
புரிந்தவாறும் நஞ்சைப் பாருய்ய அமுதாக்கிச்
சொரிந்தவாறும் பூண்முலை யாளோ டொன்றாய்
திரிந்தவாறும் வீடு வீடு இரந்தவாறும் என்கொலோ. 11

சொல்லரிய தவவலியால்
சூரனொரு பேறுபெற்று
அல்லனவும் அநீதிமுறை
யுள்ளனவும் ஆங்கியற்ற
சொல்லவொணாத் துயராட்சி
தோய்ந்தலைந்த சுரர்காண
தொல்லையிறை எம்பெருமான்
துயர்களைந்து அருள்சொரிந்தான். 12

நல்லநல்ல தவவலிகள் ஞாலம் போற்ற
மெல்லமெல்ல எமதுவினை அகற்றி மாற்றி
வல்லவல்ல தவவினைகள் விளக்கி நிற்கும்
சொல்லவல்ல மோனநிலை மேவி நின்றான். 13

விஞ்சிவரு மன்பால் விதிகண்ட விமலனவன்
மிஞ்சியுயர்ந் தவள்பாதம் வியந்தேத்திக் கொஞ்சிடவே
அஞ்சியவன் சடைக்கரந்த அண்ணலவன் வெண்மதியம்
பஞ்சினடி நல்லாளின் பாதத்திற் படிந்ததன்றே.

14

பூதப்படை யுடையான்புகழ் நாதப்பறை யுடையான்
வேதப்பொரு ளானான்நுதல் விளங்கும் பிறையாளன்
ஆதிப்பொரு ளானான்மிக அருளில்பெரு கடலான்
சீதப்புனல் மேலான்உயர் தில்லைவெளி யானே.

15

மறைகளிணீறும் மாண்புடைத் திருமுறை ஈராறும்
நிறைகளிணீறும் நின்மலத் தத்துவம் ஆறாறும்
பறைமுழவீறும் பாங்குடைத் தாளங்கள் ஓரேழும்
பிறைமதிகூறும் தாங்கும் பெரும்பரம் பொருள்நீயே.

16

தத்தித் தகதோமெனும் தாண்டவ தத்துவனே
பத்தித் திறற்றொண்டர் பாறுவினை களைபவனே
எத்திக்கு முறைந்தருளும் எம்முயிரின் நாயகனே
முத்திக்கு வித்தான முழுமுதலே முன்னவனே.

17

எண்ணரிய அருள்சுரக்கும் இமயத்து வீரனென்றும்
பண்ணரிய கவிகேட்டுப் பசிதீர்க்கும் நாதனென்றும்
விண்ணரிய தேவரெலாம் விழுந்துதொழு தேத்துகின்ற
நண்ணரிய பரம்பொருளை நானென்றும் மறவேனே. 18

நின்றதும் நிலைகுன்றாமல்
நிமலாநீ சென்னிதனில்
கொன்றையம் மாலைசூடி
கூத்துமோர் நொடிஓயாது
மன்றையம் பதியாய்க்கொண்ட
மாவீரா கைலையென்னும்
குன்றையும் பதியாய்க்கொண்டு
குமரியோ டமர்ந்த தென்னே.

19

உறைகுவான் செம்பொன்கோயில்
உன்குவார் உள்ளத்துள்ளே
பிறைகுலாம் தாங்கும் சென்னிப்
பிஞ்ஞகன் ஆனஞ்சோடு
மறைகுலாம் ஆகமத்தின்
மாபெரும் வேள்விக்கண்ணே
இறைசூழாம் அனைத்தும்கூடி
இவன்சிவன் என்னநின்றான்.

20

நேசனே எமதுவினை போக்கிடும் நீதிசேர்
ஈசனே இறைவனே இமயத்து கயிலையின்
வாசனே வானவர் வழிபடும் வளமிகு
நேசனே நின்திருத்தாள் தேன்தந் தருள்வாயே.

21

தொல்லரிய நீண்டுவரு தொக்கவினை தீர
சொல்லரிய திருமுறையின் தோத்திரங்கள் சொன்னால்
நல்லரிய நற்பெருமை ஞானநெறி யெல்லாம்
வெல்லரிய விளக்கமுறு வீடுந்தரு வானே. 22

எல்லையிலாத் தனிக்கூத்தை
இணைந்தாடும் எம்பெருமான்
தொல்லைதரு எமதுவினை
துடைத்துவரு பவமொன்றும்
இல்லையினி இல்லையினி
என்றியம்பிக் கைகாட்டும்
தில்லையுடைத் திருநடனம்
சிந்திப்பார் இனிப்பிறவார்.
23

செங்கமலச் சோலைத் தில்லைச்சிவ பெருமான்
இங்குலவி ஆடுவதற் கெண்ணியே கைதடியில்
சங்குலவு கடற்கரையில் தாளெடுத்துப் புன்சிரிப்போ
டிங்குலவி நடமிடுவான் எந்நாளும் ஏத்திடுவீர்.
24

அறுசமய நெறியுமவன் அரும்புகழை எடுத்தியம்ப
மறுசமயம் மருவிடா மாண்புபெறு சித்தாந்தம்
பெறுசமய நிலைபெற்று பெருமைபுகழ் பொலிந்திடவே
திருநெறிய சைவநெறி திகழ்ந்திடவே செய்வோனே.
25

பேயும்சூழ வருவார் பெரியபெருமை யுடையார்
நாயும்சூழ வருவார் நம்பேர்இது வென்றுரையார்
ஆயும் பூவும்கொண்டு அரற்றும் அடியார் முன்னே
தோயும் திங்கள் சுமந்து தோன்றி நிற்பார் தானே.
26

நீறும்பூவும் உடையார் நிலாப்போல் மேனியுடையார்
பீறுமாறும் உடையார் பெரியபெருமை யுடையார்
மாறும்காலும் உடையார் மாண்புபலவு முடையார்
சீறும்பாம்பும் உடையார் சிவனேஎமை யாள்பவரே. 27

உடையவனே ஓங்குபட் டுடுத்த
உமையவளை யுடையவனே
படையவனே பாம்புசூழ் பூதப்படை
தன்னை யுடையவனே
கடையவ னேனை கருணையினால்
கலந்தாண்டு கொண்ட
விடையவ னேயெம் வினைதீர்த்
தருள்புரி வேதியனே.

28

அயனும்மாலும் பறந்தும் அகழ்ந்தும் அறியக்காணார்
பயனும் பொருளும் பாடிவிரித்தும் பரனைக்காணார்
கயலும் கறையும் பொய்யர்காணக் கண்ணில் காணார்
தவழும் பிறையும் சாம்பற் பூச்சும் தரித்த பெருமானார்.

29

எங்கவர் தெய்வம் எந்நிலை பேணினும்
புங்கவர் எவர்க்கும் புன்மைகள் செய்யார்
அங்கவர் நிற்கும் அவர்நிலை கண்டு
இங்கவர் வருவர் இவர்சிவன் என்றே.

30

ஒருத்தியொடு ஒருமதியம் உறைய நின்றான்
திருத்துருத்திச் சிவபெருமான் தில்லை யுள்ளான்
இருத்திமுனி இவர்க்கருளி மோனங் காட்டி
விருத்தியுயர் வாழ்வுபெற விளக்கி னானே.

31

மெள்ளமெள்ளச் சிரிப்பார் மேதினிக்கு முன்னோன்
அள்ளஅள்ளக் கொடுப்பார் அங்குமிங்கும் எங்கும்
கள்ளிருக்கு கூந்தலுடை காளிகாண நின்று
உள்ளிருப்பர் நடனமாடி உறுவர்ஆலங் காடே. 32

அறிவியற் புலமைக்கெட்டா அகக்காட்சிக் கினியராகி
குறியியற் புலமையாலே கும்பிடும் மனத்தினுள்ளார்
பொறியியற் பூதமைந்தும் புரண்டுவீழ்ந் தோடவன்பிற்
செறிவினில் திரண்டு நிற்பார் செந்தணலழகனாரே. 33

பேதையொருபால் மகிழ்ந்திருக்க
பெம்மானசைந்து குலுங்குகுழைக்
காதையுடைய தோடுடையான்
கணபதீச்சரம் மமர்ந்தான்
போதைபெரு விசாரசர்மர்
பூசைக்கு இடர்செய்த
தாதைதனது தாளறுக்கச்
சண்டீசப் பேறளித்தான். 34

எந்தையீசன் எம்மருள் ஏதமில் பெருமையான்
சிந்தையார் செம்மையான் சீர்மையான் எம்மையன்
கந்தைகீழ் கோவணம் கொடுத்துப்பின் மூழ்கியவன்
முந்தைகீழ் கோவணம் கேட்டணைத்துக் கொண்டானே. 35

செம்மையுடைச் செல்வியவள் செய்தநற் பிட்டமுதை
இம்மையொடு இழைத்தவினை யுதிரவே செய்வித்து
அம்மையமு தீசர்அரி தேயென் றமுதுண்டு
தம்மையழைத் தவள்பங்கைத் தானடைக்க லானானே. 36

மாபெரு தெய்வப்பெண்கள் மகிழ்வொடு கூடிநின்று
சீர்பெரு செல்வியவள் சிரிப்பினைக் காணயாழில்
ஆம்மொழி பலவுமீட்டும் ஆங்கவள்சிரித் தாளில்லை
தேமொழி சிரமசைத்தாள் சிவன்புகழ் ஒன்றினுக்கே. 37

இன்னவனே இன்னவரே இவர்தானே இறைவனெனும்
மன்னவனே மன்னுலக மாண்புநெறி தருபவனே
அன்னவனே அறங்கூறி அருள்சுரக்கும் ஆதியனே
சின்மயனே தொன்மையனே செகத்திலெமைக்
காப்பவனே.
38

தீம்கிட நடனம் செய்வார் தீவினை அகல என்றும்
தாங்கிட விடத்தை உண்டு திருஅமு தாகச் செய்தாய்
தோங்கிடத் தோங்கிட வாடி தொல்வினை
அனைத்து மொன்றாய்
நீங்கிட அருள்வார் என்றும் நீதிசேர் நிமல னாரே.
39

ஆடுநடம் பேணிநிற்கும் ஆறுமுடி மேலணிந்த
பீடுடைய பிஞ்ஞகன்மேல் பீறுபுனல் பீறிவரும்
ஓடுதிரை திசையதிர ஓடியுடல் தோய் ந்ததிர
நீடுதரு சுகஞ்செய்யும் நின்மலனே தொன்மையனே.
42

அகத்திரு கண்ணிற் தோன்றும் அருளொளி
முகத்தினைப் பார்த்தவன் கரத்ததா சமனம்
பகற்றிருப் பாதத்திற் பாத்தியம் பனிச்சடை
யகத்திடை அர்க்கியம் காணுவை அருளவே.

ஏகவுரு வுள்ளானை ஏறுநடைப்
பிருங்கிமுனி வீறினோடு
ஆகமுருப் பெண்ணாளை பாதிவிட்டு
வூடறுத்து உலாவந் தெய்திப்
போகவுரு உள்ளாபோல் உமையவள் நின்
றேங்கிடவே புனித வள்ளல்
நாகமொடு மதிபுனைந்தான் நல்லபடி
ஒருபாதி நல்கினானே.

ஆகநெடு தூரம்சென் றாடி யாடிப்
பாகமொடு பண்கலந்து பாடிப் பாடி
மோகமொடு முத்திநிலை பேணிப் பேணி
நாகமொடு கங்கைதனை நயந்தா னன்றே. 43

பாடவேண்டில் அவன்புகழே பாட வேண்டும்
ஆடவேண்டில் அவன்நடனம் ஆட வேண்டும்
தேடவேண்டில் சிவனடியே தேட வேண்டும்
நாடவேண்டும் நமச்சி வாய நாவே. 44

சினமான்விடை யுடையார் திருச்சிற்றம்பலத் தையர்
மனமாண்புடை மாதினொடு தாமேயுடன் சென்று
கனமாவுரை காழியர்கோன் கருதும் கருத்தொன்றாய்
தனதோருரை அவன்வாய்தனில் தந்தான் தவத்தானே.
45

மாறுதலைக் கஜனடங்க வாரணனும் அடியார்
கூறுதலைக் கேட்டருள அறுமுகனும் என்றும்
ஆறுதலைப் பெறவரங்கள் ஆதியருட் கங்கை
பீறுதலைச் சிவன் எல்லாம் பிறங்கிடநின் றானே. 46

முத்தொழில் மூர்த்தியர் துணைவியர் தம்மில்
புத்தெழிற் புருடர்கள் நாரணர் பிரமன்
சித்தெழிற் சிவனவர் எலும்பொடு சுடலைத்
தத்துவப் பொடிபுனைந் தாருயிர் புரப்பான். 47

ஆறினொடு தீங்கனியின் சாறுதலை தோய்ந்த
சேறினொடு தனிநின்றான் சேர்ஞான வமுதம்
ஊறிவரு கலமுள்ளான் ஓங்கார முதல்வன்
வீறினொடு நிதமும் விழித்தருருள்வன் தானே. 48

செம்மைநலம் பேணு செந்தமிழர் இழைத்த
இம்மையொடு அம்மை எய்தவினையு மாழ
மெய்மைநெறி பேணி வெண்ணீறு புனைய
அம்மையமு தீசர் ஆடியருள் செய்வார். 49

நின்திருக் கோயில்தன்னை நிலவிடும் அன்பினோடு
நின்றவூர்ப் பூசலாரும் நெஞ்சிலே நிறுத்திவைக்க
அன்றவன் கோயில் செல்வோம் என்றுகாடவ கோனுக்கு
நன்றொரு நாள்வகுத்தான் நடஞ்செயும் நம்பன்தானே. 50

ஆறங்க அருமறைகள் சொல்லுமுறை பேணி
நீறங்க மேனிமறை யோர்உயர் நியாசப்
பேறங்க மானஉயர் பிராணன்நிலை நிறுத்த
கூறங்க மாயங்கு குதித்தனன் உவந்தே. 51

ஞாலங்கள் உள்ளான் நமனையுமு தைத்தான்
சீலங்கள் உள்ளான் சிந்தையிலும் உள்ளான்
கோலங்கள் பேணிக் குறிப்புணர்க என்று
சூலங்க ளோடு தோன்றியருள் செய்வான். 52

மாலங்க மானான் சிவனெங்கள் மன்னன்
பாலங்க மான பார்வதியின் பாகன்
நாலங்க மான உயர்வேத நாதன்
மூலங்கள் பாடும் முத்தருக் கினியான். 53

கங்கை சடைக்கரந்த கண்மேலொரு கண்ணான்
மங்கை மகிழ்ந்திருக்க மதியுடையார் தலைக்கணிந்த
கங்கை திரும்பினள் கைலேசன் அம்மையென
நங்கை மணவாளன் நயந்து நகைத்தானே. 54

பீறுபுக ழுள்ளான் பெருமைநிலை யுள்ளான்
வீறுபுக ழுள்ளான் வீரமது கொண்டு
பேறுபுக ழெல்லாம் பெருமையது பேணில்
கூறுபுக ழெல்லாம் கொள்வர்அடி யாரே. 55

எண்ணரிய திருவருளை எங்கும் செய்வான்
கண்ணப்பன் கண்ணகழக் காட்சி தந்தான்
மண்ணகழ்ந்தும் விண்புகுந்தும் மாட்டா அயன்மாலும்
நண்ணரியான் நற்பாட்டை நாடியே நண்ணுவனே. 56

பண்ணமரு பாடல்பணி நயப்பாய் பாங்கில்லா
புண்ணிதயர் தம்மிடமும் போகாய் பண்பின்றி
நண்ணவரு பொக்கருரை நாணுவாய் நக்குநிற்பாய்
எண்ணிதய மெழுந்தருள்வ தெப்போதோ இறையவனே. 57

வீஞ்சுபொங்கு வாரியில் வீறுநஞ்சு தனைக்கண்டு
அஞ்சியோடும் தேவருக்கு அமுதமுண்ணத் தந்தவா
நஞ்சையே தானுண்டு நல்லகண்டம் கறுத்ததனால்
வஞ்சிபஞ்சின் மெல்லடிசேர் பார்ப்பதியாள் வருந்தாளோ. 58

உள்விழுங்கு நஞ்சினை யுண்டிடாமல் உலகுயிர்
கள்ளமின்றி வாழ்ந்திடக் கலந்திடாது கடுவிடம்
மென்னவாயி லிட்டவா விண்ணினோர்கள் சாவிலாத்
தெள்ளுமின்பம் நல்குநின் திருவிளையாட் டென்கொலோ. 59

நன்மை தீமை யோர்ந்தி டாத நல்லடியர் சிங்கமென்
னுன்னு சீலன் அவன்புகழ் தொடர நிற்கு மேன்மையான்
அன்ன வாய வெம்மிறை அனுவு மாகித் தூயநம்
பொன்னின் தாயு மாகினான் புவன மெங்கும் போற்றவே. 60

யாழை வென்ற மொழியாள் பாகமுள்ள பெரியான்
பாளை தூங்கு கமுகு ஆடுசோலை தில்லை
யாழை யேந்தி நிற்றான் யமற்கும் காலனாவான்
தாளை யேந்தி நிற்பான் தரணிபோற்றும் தலைவன்.
61

குன்றென நின்றிடும் குழகன் திருக்கோயில்
முன்றிலில் முப்புரிநூல் அந்தணர் மறைசொல்லி
தன்னருட் பொலிவாலே ஆவாகன தாபன
சன்னிதானம் செய்யச் தானருளும் தக்கோனே. 62

இவன்தான் தில்லையிற் சிவனாவான் என்றுரைக்க
சிவன்தான் எனவே சிரித்திட்டான் இவன்கடவு
யமன்தான் உதைக்கும் யமகாலன் இவனவனே
இவன்தான் சிவனாக இலிங்கத்தில் தோன்றினனே.
63

வன்னிமலர்ச் சென்னியுளான்
மருவுமவன் பாகத்தில்
அன்னையெனும் பெருஞ்சக்தி
அருட்சோதி வடிவுடையாள்
முன்னைஎதிர் மகுடனெனும்
முரடனையும் வந்தழித்தாள்
அன்னையிந்தப் பேறுடையாள்
அத்தனருட் பொலிவாலே. 64

பவம்தான் புகுந்திடா வுன்னடியார்க் குதவிநீ
திவம்மேல் விழித்திருக்க சிவசக்தி கொள்ளையிட்டு
தவமான நின்னருளை நல்குவது காண்கிறோம்
தவராச னேஉன்றன் சக்திசெய லீதையா. 65

பெண்ணரி பாகம் உள்ளாய் பேசிடும் நமதிலங்கை
எண்ணரும் புகழின்மிக்க இராவணன் இசையைக் கேட்டு
விண்ணவர் வியக்கநின்று விறலொடு விதியு மீந்த
அண்ணலின் செயலைக் கண்டு அடியம்யாம் அஞ்சினோமே
66

உமையாள் திகைத்திருக்க ஓடுமத
வேங்கையைப் பிடித்துரிந்து
சுமையான தோல்போர்த்துச் தூயமழு
வோடுதிரி சூலமேந்தி
இமையோரும் முனிவரரும் இசைபூதப்
படையினரும் ஏத்திநிற்க
நமையாளும் பரம்பொருளாய் தில்லையிலே
நடமிடுவான் நமச்சிவாயம். 67

சிவமே யெனப்புகழ் பாடி நின்றபோ துனதடி
தவமே பெருக்கும் தவவீ ரர்களின் நல்ல
புகழே பெருக்கும் சிவபுண் ணியாமுன்
பவமே தொடரா தெமையாள் குதியே
68

அழுதே அரனென்று அவன்திருப் பாதம்
தொழுதே தொடர்ந்திடும் அடியார்கள் என்றும்
பழுதே வராமல் பலபேறு நல்கும்
மழுவே கரங்கொண்டு நல்மதிசூடுவை மாதவனே. 69

கதியேது மின்றி கதியேயுன தென்று
விதியே யுனதான விதிபேணும் நல்விமலன்
மதியேதும் குன்றிடா மாண்பருள் சுரந்த
பொதிபோற் செஞ்சடை பொதிந்த புகழானே. 70

சினமே பொங்கிவரு சேராதார் வலிமாள
அனலே யெனநின்று அடிமுடி தெரியாமல்
இனிதாம் தன்னருமைப் பெருமையைக் காட்டிடும்
மனமே கொண்டருள் மழுவிடை மகாசிவனே. 71

மறப்பர் மதியிலார் என்றும் மதியுடையார்
சிறப்பர் மதியுளார் மறைபொருள் பயின்றென்றும்
பிறப்பர் இறப்பர் என்றபெரும் பேதங்கள்
அறுப்பர் அவரே திருந்தடி யிணைவாரே. 72

சிந்தையாற் றொழுதெழு விந்தையார் வினைசேர்
முந்தையால் தொடர்ந்தெழு மும்மல மடக்கி
எந்தையான் அவனவள் என்னும் அரியநல்
விந்தையால் உலகினை விளக்குவை விமலனே. 73

வந்திடும் வாதவூரன்
மலிவினை சூழ்ந்துநின்ற
பந்தனை நீக்குமாபோல்
பாண்டியன் பணத்தையெல்லாம்
எந்தையின் பணிகட்காக்கி
இவுளிக்காய் தண்டம் கொண்ட
சிந்தையான் குளிரும் வண்ணம்
திருக்கூலி கொண்டவாறே. 74

என்னவை எவரெவர் செய்யினும் ஏற்பாய்
தன்னினும் அடியரைத் தாங்குவை கொடியார்
நின்னடி யரைநலிந் தாற்பொறுக் காயோர்
கன்னியை உடையநங் கைலைநா யகனே. 75

சிவனே எமக்கிறைவன் சிவையே
எமக்கிறைவி என்றும் எல்லாத்
தவமே புகன்றிருக்க தம்முரையே
சரியென்று தவறாய்ச் சொல்லி
பவமே தொடர்கின்ற பரசமயப்
பாண்குழியில் படரா வண்ணம்
சிவமே எமைக்காப்பன் அவனெம்மைச்
செயலியக்கும் சிந்தையானே. 76

அவமே பழிசொல்லி அறுசமயம்
உனக்கில்லை என்னும் வீணர்
தவமே புரிந்து தகவுஜெபம்
புரியஅருள் தருவை யானால்
சிவமே அனைத்துமெனத் தெளிந்து
மனம்மாறாமல் சிறுமை போக்கி
பவமே தொடராமல் பழிபயிலா
வாழ்வளிக்கும் பரம சோதி. 77

சிவனேநின் அருட்டிறத்தை சிறிதேனும் அறியாமல்
அவமே விளம்புகிறார் அறிவே மயங்குகிறார்
புவனாதி யண்டமொடு கணபதிநீ கந்தனும்நீ
சிவசக்தி நீஅரிநீ திரண்டபரம் பொருளுநீயே. 78

பனிசேர் சடைமுடியான் தரியாத மறலிதன்னை
நனிதே உதைத்தழித்து மார்க்கண்டற் கெண்ணில்வய(து)
இனிதே உவந்தழித்துத், தொண்டர்க்கிறப் பில்லையென்ற
கனியாம் பொருள் விளங்கக் காட்டினான்
கருணையாலே
79

அருளே மிகச்சொரித்து மகிடனின் தலையேறி
இருளேய ஆணவத்தை அடுந்திரி சூலிஎன்ற
மருளே யறநின்ற பூரணிதுர்க்கை யாளைப்
பொருளேயென உவந்தான் பொன்மேனி மாதவனே. 80

உலகே நிறைந்த உயிரானவுன்னை உணர்வறியாப்
பலமே இழந்து பழியே பெருக்கும் பான்மையினோர்
மலமே வளர்ந்த மகிடன்நிலைபோல் மதிகுலைந்து
கலமேற் றணுகினும் பிச்சையுமின்றிக் கலங்குவரே. 81

விழலே பல சொல்லி வினையே நிலைத்திருக்கும்
வீணர் உன்னை
உளரோ வெனவேங்க யுருவோடு வந்து
உள்ள நிறை ஓங்கார நின்
நிழலே சுகமென்ற நிலையாம் பெருவாழ்வை
நீதானிரங்கி யருளுன்
கழலே பவக்கடற் தெப்பமாம் சுதந்திரக்
கதிவேறு காண்கிலேற்கே. 82

இடரான நீக்கி யுனதாள்க ளெண்ண
இடையூறு செய்யு மிழிவாரை
படராக நின்று அவர்பந்த தொந்தம்
பழுதான சிந்தை அவர்பூணும்
அடர்மான எண்ணம் அகன்றோட நின்று
அழிவான வேலை அணுகாமல்
திடமாக நின்று திரிசூல மேந்தி
திருத்தில்லை யாடும் பெருமானே. 83

படைவீடு கொண்ட குமரேசன் என்னும்
பாலமுரு கேசரும் யானைப்
படையோடு நின்றவுணக் கஜனாரைக் கடவு
கணநாத னாரும் நற்பாற்
கடலொடு நின்று ஆழிகை யேந்து
பள்ளி கொள்வாரும் தூய
விடையொடு நின்று விரிசூலம் கொண்டு
விளையாடுவார்நம் விமலர் தானே. 84

அவமானம் ஓய அறிவீனம் தேய
அலைசிந்தை யறிவுதங்க
கவரேறு பேய்கள் அணுகாது தெய்வ
கதிகாணும் சேவைபுரிய
திவமான சிந்தை கூடிதேகு விந்து
தெளிவான யோகமலர
சிவநாத எங்கள் ஜெகவீர கண்ணின்
திருநோக்கு நல்கியருளே. 85

தேனார் மலர்க்கொன்றை செஞ்சடைமேல்
அணிந்து துன்ளு
மானார் கையேந்தி மறைபொருளை
விரிக்கு மறி
வானார் அம்பலத்தான் வானோர்கள்
வணங்குமரன்
ஊனார் உடல்புகுந்தங்
கொளிவிளக்காய் நின்றானே. 86

அள்ளும் சுடலைச் சாம்பலை அங்கம் பூசிமறை
மெள்ளச் சொல்லி மங்குல் மதியம் மேவும் புனல்சேர
புள்ளி வேங்கை உடை தரித்த புனிதன் அங்கமெங்கும்
அள்ளிச் சாந்தும் குங்கும களபமும் அணிவான்தானே
87

மன்றாடு மணாளனை என்றும் மாண்புநெறி
குன்றாத குவலயத்துக் கூத்தனை ஈமத்தில்
நின்றாடும் நின்மலனை நைந்துநைந் தேத்திநிதம்
அன்றாடம் வழிபட்டால் அகத்தில்நின் றாடுவனே.
88

நான்மறைக்கு முதலான ஞான வீரா
தேன்பிலிற்றும் திருக்கொன்றை சூடுஞ் செல்வா
மான்மழுவும் கையேந்தி மாண்பின் தொண்டர்
ஊன்தலையில் எழுத்தழிக்கும் உமையின் கோனே. 89

ஆறங்க மென்றும் அயராது பகரும்வெண்
நிறங்கம் பூசி வெண்நூ லணிந்துபல
பூதங்கள் சூழப் பொன்வீடு கொள்வான்
ஏதங்கள் தீரவே ஏந்திநட மாடுவனே. 90

ஐயங்கள் பெற்று அருமறைகள் சொல்லி
மைகொண்ட கண்ணி மகிழ்வெய்த வருவான்
மெய்யர்கள் பேணி மேதினிகள் முழுதும்
உய்வொன்றை எண்ணி ஒருகாலில் நிற்பான். 91

பசியென்று மில்லான் பசியென்று கேட்பான்
வசியென்ற சொல்லான் மறையேத்து நீதன்
சசியொன்று கொண்டான் உணவொன் றுவேண்டிக்
கசிவொன்று பாலன் பலிகேட்டு வந்தான். 92

தாளங்கள் ஒன்றும் சற்றும் பிழைக்கான்
மேளங்கள் கொட்ட நின்றே நடிப்பான்
ஞாலங்கள் போற்றும் நாயகன் என்றும்
காலங்கள் வெல்லும் கலைஞானி தானே. 93

சென்றுசென்று திருவருள் பேணித் திகைத்து
நின்றுநின்று நிலாவனை மேனிகண் டுள்ளம்
ஒன்றியொன்றி வணங்குவோர் வண்மை உவப்பன்
என்றும், என்றும் நின்றுலவும் எம்மானே. 94

வேதப் பொருளால் விளங்கு விமலனிவன்
நாத விந்துகலை நடமிடும் நாதனிவன்
சீதப் புனல்தலை தரித்துத் திலகநுதல்
மாதர்ப் பிடிமகிழ மகிழ்ந்தாடு மணாளனே. 95

ஏதமது இலார்முன் எளிமைநிலை பேணித்தச
நாதமொடு நின்றூர்த்துவநடன மாடுசிவன்
பூதமது சூழப் பொலிவுபல உள்ளான்நற்
சீதவய லுள்ள தில்லைநக ரானே. 96

தொல்லைவன வல்லார் தூசுகள் அடக்கி
வில்லையொரு கையால் ஏந்திஒரு தேக்கக்
கல்லையிலை வைத்த கண்ணப்பர் ஊனை
நல்லையினி தென்று நம்பனவன் கொண்டான். 97

ஆலவாயி லப்பனை ஆடுமெங்க எண்ணலை
காலகால விஷத்தையே கையிலேந்தி உண்டவெம்
சீலஞான சிங்கனை சிக்கனவே பிடிப்பவர்க்
கேலவார் குழலியான் இணையவந் தருளுவான். 98

நீள்தொந் தமொடு வந்த நீடுவினை நீக்கி
வாழ்கின் றமொரு மன்னுபுகழ்நிலை பெற்ற
நீள்செம்மை பெறுசெஞ் சடையனாவின் நீறுடையான்
யாழ் கொண்டு பெருமைந்து வினையாற்றி
யருள்வானே
99

பெரிய புகழ்சூடும் பிறப்பிலி பிஞ்ஞகன்
விரியு சடைவளரும் பிறையுளான் வெந்தழல்
எரிய நடமாடும் தில்லையுளான் பொதிகைக்(கு)
அரிய குறுமுனியை அனுப்பி னான் அவன்தானே.
100

நூற்பயன்

நீண்டமிடியால் வாடார்கள் நெஞ்சிற்
கவலை கொள்ளார்கள்
துண்டு மலத்தில் சுழலார்கள் சொந்தம்
பந்தம் பலவாலே
பூண்ட வினையால் புழுங்கார்கள்
பொன்னம்பலத்தான் அடியார்கள்
வேண்டும் பிறவிப் பயனெய்தி விமலன்
வீட்டில் வாழ்வாரே. 101

நமச்சிவாயம் திகழ்கின்ற நல்ல சிவனார்
அருளமுதை
அமைத்து நெஞ்சில் சிவபாதம் ஐந்து
மொன்ற அகங்குழைவோர்
நமப்புரத்தை யணுகாரர்கள் நலியும்
பிறவிக் கடல்வீழார்
இமப்புரத்தி யொரு பாகன் இன்பக்
கழற்கீழ் இருப்பாரே. 102

சிவனருளமுதம் முற்றிற்று.

*திருச்சிற்றம்பலம்*



ஏழாலை மஹாத்மா அச்சகம்
கந்தர்மடம்.